உதயன்

விலை ரூபா

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 06 சனிக்கிழமை (22.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 269

www.uthayan.com

# புலிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களை இலங்கை அரசிடம் ஒப்படையுங்கள்!

## கோத்தபாய கோரிக்கை



கொழும்பு, ஓக. 22

**விடுதலைப் புலிகளின் பல மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்கள் வெளிநாடுகளில் உள்ளன என்று தெரிவித்துள்ள இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய் ராஜபக்ஷ, அவற்றை அந்தந்த நாடுகள் இலங்கையிடம் ஒப்படைக்க முன்வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.**

பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே கோத்தபாய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முகாமை உறுப்பினர் எனக் கருதப்படும் கே.பி. கைது செய்யப்பட்டு சில வாரங்களுக்குப் பின்னர் பாதுகாப்புச் செயலாளர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கே.பி. மிகுந்த அனுபவசாலி. இதன் காரணமாக விசாரணைகளின்போது அவர் மிக மெதுவாகவே தகவல்களை வெளியிடுகிறார் எனக் கோத்தபாய தெரிவித்துள்ளார்.

கே.பியே விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள், வெடிமருந்துகளைக் கொள்வனவு செய்யும் பெரும் வலையமைப்பைக் கடந்த 30 வருடங்களாக இயக்கி வந்தவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கைத்தொலைபேசிப் பாவனை ஆசிரியர்களுக்குத் தடையில்லை

### பாட நேரங்களில் பயன்படுத்த முடியாது

கொழும்பு, ஓக. 22

பாடசாலைகளில் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு எவ்விதத் தடையும் விதிக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், பாட நேரங்களின்போது கடமையில் உள்ள ஆசிரியர்கள் தொலைபேசி அழைப்புக்களை நிறுத்திக்கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

## அகதிகளை மீளக்குடியேற்றி, அரசியல் தீர்வு காண்பதன் மூலமே சர்வதேச சமூகத்தில் தன் கௌரவத்தை இலங்கை பேண முடியும்

### இப்படி ஆலோசனை கூறுகிறது அமெரிக்கா

வாஷிங்ரன், ஓக. 22

இலங்கை சர்வதேச சமூகத்தின் கௌரவமான உறுப்பு நாடாகத் தான் விளங்க வேண்டுமெனில், இடம்பெயர்ந்தவர்கள் துரிதமாக மீளக் குடியேற்றப்படுதல், அரசியல் நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் முன்னேற்றத்தை காண்பதற்கான நடவடிக்கைகளை அது விரைந்து மேற்கொள்வது அவசியம் என அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

'சி.என்.என்.' தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அமெரிக்காவின் தென்னாசியாவிற்கான உதவி வெளிவிவகாரச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் இதனைத் தெரிவித்துள்ளார்.



அவர்அதில்மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

சமாதானத்தை வெல்வதற்கான (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரில் அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள், வீதித்தடைகள் நீக்கம்

கொழும்பு, ஓக. 22

வவுனியா நகரின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்டிருந்த 32 பதுங்கு குழிகள், 40 வீதித் தடைகள், 6 காவலரண்களை பொலிஸாரும், இராணுவத்தினரும் நேற்று முன்தினம் அகற்றியுள்ளனர்.

படைத்தரப்பினர் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமையவே இவைகள் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டுள்ளன.

வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிகள் மற்றும் காவலரண்கள் சுமார் 20 வருடங்களுக்கு மேல் பழைமையானவை எனவும் இவை எல்லைக் கிராமங்கள் மற்றும் இராணுவ முகாம்களில் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்தன(16 ஆம் பக்கம் பார்க்க)

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்

### ஜனாதிபதி இந்தியாவிடம் உறுதியளித்ததாக சபையில் தகவல்

கொழும்பு, ஓக. 22

• 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை பூரணமாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிடம் உறுதியளித்துள்ளார்.

- இவ்வாறு பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் பைலா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரியசிறி மானகே எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை முறியடிப்பது குறித்து பயிற்சியளிக்க இலங்கையில் கல்லூரி

### பிறநாட்டுப் படையினருக்கு இங்கு போதனை

கொழும்பு, ஓக. 22

பயங்கரவாதத்தை முறியடிப்பது எப்படி என்று சர்வதேச நாடுகளின் படையினருக்கு பயிற்சி வழங்குவதற்காக இலங்கையில் விசேட பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சர்வதேச நாடுகளின் படையினருக்குப் பயங்கரவாதத்தை முறியடிப்பது எப்படியென பயிற்சிகளை வழங்குவதற்காக இலங்கையில் விசேட பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட உள்ளது என்ற தகவலை இலங்கை இராணுவத் தளபதிலெப்டினண்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஊடக வியலாளர்களுக்குத் தெரியப்படுத்தி உள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைப் படையினர் பயங்கரவாதத்தை உள்நாட்டில் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர். இந்நிலையில், இலங்கைப் படையினரால் யுத்த நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்பட்ட இராணுவ தந்திரோபாயங்களையும் இராணுவ உத்திகளையும் அறிந்துகொள்வதில் சர்வதேச நர்டுகள் மிகுந்த(16 ஆம் பக்கம் பார்க்க)

## மகஸின் சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் இன்று முதல் சாகும் வரை உண்ணாவிரதம்

கொழும்பு, ஓக. 22

மகஸின் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகள் இன்று முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் முன்வைத்த கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமையை ஆட்சேபித்தே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை சிறைச்சாலை அரசியல் கைதிகள் ஆரம்பிக்கின்றனர் எனவும் கூறப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டும் அதற்குரிய பதில் இதுவரை கிடைக்கவில்லை என்று சிறைக்கைதிகள் தெரிவித்தனர் எனத் தகவல்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant

தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ், ஸ்பெஷல் நாண், பூரி, சூப் மற்றும் சைனீஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

Open 11.00 am to 11.00 pm

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. CALL: 0112504020

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். CALL: 0212225895

கொசி உணவகம் feel at home

யாழ் நகரிலும் கொழும்பிலும் நீண்ட காலமாக சுவையான, தரமான Indian, Chinees உணவு வகைகளுடன்

AC Non AC Rooms Available

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஈழத்தமிழர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய தீர்வை பெற்றுக் கொடுக்கத் தொடர்ந்து போராடுவோம்

## சென்னையில் நடந்த உலகத் தமிழர் பிரகடனத்தில் உறுதிமொழி




சென்னை, ஒக. 22

ஈழத் தமிழ் மக்கள் ஒப்புக்கொள்ளக் கூடிய திட்டம் ஒன்றே அவர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே வழி. அதைப் பெற்றுக் கொடுப்பதற்காக எம்மை முழுமையாக ஒப்படைத்து தொடர்ந்து போரா டுவோம்.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் வெளியிடப்பட்ட உலகத் தமிழர் பிரகடனத்தில் உறுதி மொழி எடுக்கப்பட்டது.

'ஈழத்தமிழர் வாழ்வுரிஷமக்கான உலகத் தமிழர் பிரகடனம்' என்ற தலைப்பில் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னை அமைந்தகரையில் நேற்று முன்தினம் வியாழன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு ஒருங்கிணைப் பாளர் பழ.நெடுமாறன் தலைமை வகித்தார். பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்தக் கூட்டத்தில் ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கான உலகத் தமிழர் பிரகடனம் வெளியிடப்பட்டது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உலகத் தமிழர் பிரகடனத்தை வாசித்தார். அப்போது அங்கே கூடியிருந்த ஆயிரக் கணக்கானவர்கள் தீப்பந்தம் ஏந்தி உறுதி மொழியை ஏற்றுக்கொண்டனர்.

கூட்டத்தில் பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் பேசியவை வருமாறு -

சிங்களவர்களுடன் தமிழர்களும் சேர்ந்து வாழலாம் என்பது தமிழர்களை ஒடுக்குவதற்கு செய்யும் முயற்சியாகும். தமிழர்களின் 60 ஆண்டுகால போராட்டத்திற்கு என்ன பலன்? தமிழ் ஈழம் அமைவது ஒன்றுதான் தீர்வாக இருக்கும்.

தமிழீழம் அமைத்தால் இந்தியாவிற்கு அது நட்பு நாடாக இருக்கும். இந்தியா இப்போதாவது விழித்துக்கொள்ள வேண்டும். தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க வேண்டும் - என்றார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பேசியவை வருமாறு -

3 லட்சம் தமிழர்கள் முள்வேலிக்குள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை. உணவு, மருந்து இல்லை. இந்த நிலையில் இலங்கை பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஏற்பட்டு விட்டது எனச் சொல்கிறீர்களே, அங்கு இனப் படுகொலை நடக்கிறது இதற்கு என்ன சொல்ல போகிறீர்கள்? கட்சி எல்லைகளை கடந்து இன்று இந்த உலக தமிழர் பிரகடனத்தை நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோம்.

மஹிந்த ராஜபக்ஷவால் விடுதலைப் புலிகளை அழித்து விட முடியாது. சென்னையில் இப்போது இங்கு வெளியிடப்படும் உலக தமிழர் பிரகடனத்தை கிராமங்கள் தோறும் எடுத்து செல்வோம் - என்றார்.

பழ.நெடுமாறன் பேசும்போது-

தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்து பேசுவது தவறில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. எங்களை மிரட்டிப் பார்க்க முடியாது - என்றார்.

இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் வெளியிடப்பட்ட உலகத் தமிழர் பிரகடனத்தில்-

ஈழத் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகத்தில், அவர்களுக்கு முழுமையான மனித, ஜனநாயக உரிமைகள் வழங்குவதற்கேற்ற அரசமைப்பு உருவாக வேண்டும். அதற்கு உலக மக்களின், நாடுகளின் ஆதரவைத் திரட்ட வேண்டும்.

ஈழத் தமிழ் மக்கள் ஒப்புக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றே அவர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே வழி. அதற்காக எம்மை முழுமையாக ஒப்படைத்து தொடர்ந்து போராடுவோம்.

தங்கள் தாயகத்திலும், உலக நாடுகளிலும் புலம் பெயர்ந்திருக்கும் ஈழத் தமிழர்கள் அனைவரும் அவரவர் ஊர்களிலும், வீடுகளிலும் மீண்டும் குடியேறி, அமைதியான - இயல்பான - சுதந்திரமான வாழ்க்கையை நடத்த உலகத் தமிழர்கள் துணை நிற்க வேண்டும்.

தமிழர் பகுதியில் அத்துமீறி உருவாக்கப்பட்ட சிங்களக் குடியிருப்புகளையும், சிங்கள இராணுவ முகாம்களையும் ஐக்கிய நாடுகள் சபை வெளியேற்ற வேண்டும்.

மனித நேய உணர்வை மீறித் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளையும், கொலைகளையும் செய்த இலங்கை இராணுவ அதிகாரிகளும், அவர்களை ஏவிவிட்ட இலங்கை அரசியல் வாதிகளும் சர்வதேச நீதிமன்றத்தில் போர்க்குற்ற வாளிகளாக நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

உலகில் உள்ள மற்ற தேசிய இன மக்களைப் போல, முழுமையான இறையாண்மை உள்ள மக்களாக வாழும் உரிமையும், தங்களின் எதிர்காலத்தைத் தாங்களே முடிவு செய்து கொள்ளும் உரிமையும் ஈழத் தமிழர்களுக்கும் உண்டு. அந்த வாழ்வுரிமையை பெற, உலகத் தமிழர்கள் அவர்களுக்கு துணை நிற்க வேண்டும் - என்பன உள்ளிட்ட அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

(மற்றொரு செய்தி 15 ஆம் பக்கத்தில்)

# இலங்கையின் மோசமான நிலை குறித்து பக்கச் சார்பாகச் செயற்படுகிறது கனடா

## அந்நாட்டின் புதிய ஜனநாயகக் கட்சி குற்றச்சாட்டு

இலங்கையில் நிலவும் மோசமான சூழல் குறித்து ஐக்கிய நாடுகள் சபையும் ஐரோப்பிய ஒன்றியமும் செயற்றிறனுடன் கவனம் செலுத்திவரும் நிலையில், கனடா பக்கச்சார்பு நிலை எடுத்துள்ளது - என்று அந்நாட்டு புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜாக் லேடொன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவுவது போன்ற சிக்கலான சூழலில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் அமைதிக்காகவும் பெரிய அளவில் பணியாற்ற வேண்டும் என்பது கனேடியர்ளுக்குத் தெரியும். மக்களின் அத்தகைய எதிர்பார்ப்புக்களை நாட்டின் பிரதமர் நிறைவேற்றுவதற்கான சரியான தருணம் இதுதான் என்று லேடோன் மேலும் தெரிவித்தார்.

கட்சியின் கொள்ளைப் பிரகடனக் கூட்டத்தில் இலங்கை தொடர்பிலான பிரேரணை ஒன்றையும் புதிய ஜனநாயகக் கட்சி நிறைவேற்றியது.

இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான மனிதாபிமான உதவிகளையும், அனுசரணையையும் தடங்கல் அற்ற விதத்தில் கிடைப்பதற்கும் அனைத்துலக கண்காணிப்பாளர்களும், சுயாதீன ஊடகங்களும் அந்த மக்களை அணுகுவதற்குமான தடையற்ற அனுமதியை இலங்கை அரசு வழங்கும் வகையிலான அழுத்தங்களை அந்த நாடு மீது கனடா பிரயோகிக்க வேண்டும் என கட்சியின் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரால் அநாதையாகிவிட்ட சிறுவர்களுக்குச் சிறப்பான ஆதரவை வழங்க வேண்டும். கனடாவில் உள்ள தமிழர்களின் குடும்பங்கள் மீண்டும் இணைவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். அவசரமாகத் தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகளை புதிய ஜனநாயகக் கட்சி கனடா அரசிடம் முன்வைத்துள்ளது.

கனடியப் பிரதமர் கார்ப்பரின் அரசு, இலங்கையில் நிலவும் மனிதப் பேரவலத்தை முடிவுக்குக் கொண்டுவரவும், மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று லேடோனும் அவரது கட்சியினரும் ஆழமாக வலியுறுத்தி உள்ளனர். (அ-சி)

# பண்டிதமணி நினைவான சம்பந்தர் விருது பேராசிரியர் கனகரத்தினத்தின் நாலுக்கு

### நாளை நல்லை ஆதீனத்தில் விழா

யாழ்ப்பாணம், ஒக.22

இலக்கியக்கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக சம்பந்தர் விருது அறக்கட்டளை சபையின் சம்பந்தன் விருது வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி விருது 'நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும்' நூலின் ஆசிரியர் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினத்துக்கு வழங்கப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கலாநிதி பண்டிதர் சி. கணபதிப்பிள்ளையின் நினைவுரையை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார்.

சம்பந்தன் விருதினை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா வழங்குவார். நயப்புரையை கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார். பதிலுரையை பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் வழங்குவார். (201)

## சண்டிலிப்பாயில் இலவச ஆயுள்வேத வைத்திய சேவை

யாழ்ப்பாணம், ஒக.22

சண்டிலிப்பாய் மத்தி கிராம அலுவலர் அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை இலவச ஆயுள்வேத வைத்திய சேவை நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இன்று காலை முதல் வைத்தியசேவை இடம்பெறும்.

சண்டிலிப்பாய் மத்தி முதியோர் சங்க தலைவர் க. தம்பாபிள்ளை, செயலாளர் நா. குகதாசன் ஆகியோர் இணைந்து இச் செயற்பாட்டை முன்னெடுக்கின்றனர்.

வலி.தென்மேற்கு பிரிவு மக்கள் இதில் கலந்து கொண்டு நன்மையடையலாம் என தலைவர் தெரிவித்தார்.

கடந்தவாரம் மேற்படி வைத்திய சேவை ஆனைக்கோட்டை உப அலுவலகத்தில் நடைபெற்றது. (302)

## நுண்நிதியியல் கருத்துக்களம்

யாழ்ப்பாணம், ஒக.22

யாழ்ப்பாணம் முகாமையாளர் கருத்துக் களத்தில் ஹற்றன் நஷனல் வங்கி, பங்காளியாக இணைந்து நுண்நிதியிடல் கருத்தாடலை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை மாலை ஐந்து மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தாடல் களத்தில் தொழித்துறை நிபுணர்கள், கல்விமான்கள், நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரச. அதிகாரிகள் என 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் நுண் நிதியிடல் துறையில் உலகளவில் பிரபலம் பெற்று வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் சில்லறை வங்கிச் சேவைகளுக்குப் பொறுப்பான சந்துல அபேவிக்கிரம இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். (அ-06)

## காலபோக விதை உருளைக்கிழங்கு பெற்றுக் கொள்ளக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக.22

யாழ். குடாநாட்டு விவசாயத் தேவைக்கு காலபோக விதை உருளைக்கிழங்கு பெற்றுக்கொள்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

திருநெல்வேலியில் உள்ள யாழ்.தேச வள விவசாயிகள் மாநாட்டு மண்டபத்தில் தலைவர் சி. பொ. வ. மா. க. முதலியார் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும்.

பிரதம அதிதிகளாக றொபிக்கல் - ரெக்னிக்கல் முகாமையாளர் வி. செல்வக்குமார், வர்த்தக முகாமையாளர் அ. அஜித் ஆகியோரும் -

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி பிரதி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்சண்டர் சாள்ஸ்சும், யாழ். மாவட்ட விவசாய உதவி ஆணையாளர் பற்றிக் டிறைஞ்சனும், யாழ். மாவட்ட விவசாய உதவி பணிப்பாளர் எஸ். சிவகுமார், திருநெல்வேலி விவசாய கல்வி உத்தியோகஸ்தர் கே. சௌந்தரநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர்.

## தென்மராட்சிப் பிரதேசக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 22

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு, விவசாயக் குழு, சுற்றாடல் சுகாதார குழு ஆகியவற்றின் கூட்டங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும், மு.ப. 10.30 மணிக்கு சுற்றாடல் சுகாதாரக் குழு கூட்டமும், பகல் 11 மணிக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (6-207)

## நவாலி ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகம் நாளை

நவாலி தேற்றா மரத்தடி ஸ்ரீஞான வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை காலை 7 மணி தொடக்கம் பிரம்ம ஸ்ரீ க.சி.பாலசண்முகக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறவுள்ளன.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து சகஷ்ர நாம அர்ச்சனையும் விஷேட பூசையும் இடம்பெறவுள்ளதுடன் அன்னதானமும் இடம்பெறும். (6)

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் ஆவணி ஞாயிறு உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக. 22

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் ஆவணி ஞாயிறு உற்சவம் நாளை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதி அடுத்தமாதம் 6, 13 ஆம் திகதிகளின் ஞாயிறு தினங்களில் இடம்பெறவுள்ளது.

உற்சவ தினங்களில் காலை 10 மணிக்கு விஷேட பூஜைகளும் வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார்.

உற்சவ தினங்களில் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ, வடமராட்சி சிற்றூர்தி சங்கம் ஆகியவை விசேட பஸ்சேவையை பருத்தித்துறையில் இருந்து கோயில் வரை நடத்தவுள்ளன. (6-236)

## திங்களன்று நாவற்குழியில் 'கோப் சிற்றி' திறக்கப்படும்

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு - நகர் (கோப் சிற்றி) நாளை மறுதினம் திங்கட்கிழமை நாவற்குழியில் திறக்கப்படவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கூட்டுறவு நகர் வர்த்தக நிலையத்தினை திறந்து வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (06-207)

## தென்மராட்சி தெற்கில் வயல்வேலை ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சி தெற்கில் நெற்செய்கைக்கு விடுவிக்கப்பட்ட பகுதியின் வயல்களில் உழவு வேலைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

அன்றைய தினம் அனைத்து நெற்செய்கையாளர்களையும் ஆயத்தங்களுடன் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-207)


**31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்**



அமரர்

சின்னப் பொடியன் வல்லி

பிறப்பு: 12★12★1944 இறப்பு: 23★07★2009

எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து கடிதம், தொலைபேசிவாயிலாகவும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மற்றும் நேரடியாக வந்தும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அமெரிக்காவின் அதீத சிரத்தையும் அலட்டிக் கொள்ளாத கொழும்பும்

'சர்வதேச பொலிஸ்காரன்' என வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் தரப்பிலிருந்து கடந்த பத்து நாள்களுக்குள் பல தடவைகள் - ஐந்தாறு முறைகளுக்கு மேல் - இலங்கை விவகாரம் குறித்து, குறிப்பாக வன்னியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் விடயம் பற்றி, பகிரங்கமாகக் கருத்துகள் வெளியிடப்பட்டிருக்கின்றமை மிக முக்கிய அம்சமாகின்றது. பல்வேறு தரத்தில் உள்ள அமெரிக்க உயர் அதிகாரிகள் திரும்பத் திரும்ப ஒரே விடயத்தை ஒட்டி இராஜதந்திர வார்த்தைகளில் நாசூக்காகக் கருத்தை முன்வைத்து வருகின்றமை குறித்து கொழும்பு அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருப்பது ஆச்சரியத்தைத் தருகின்றது.

'குரைக்கின்ற நாய் கடிக்காது' என்றோ அல்லது 'சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தால் யாருக்கு நஷ்டம்?' என்பது போலவே, இவ்விடயத்தை கொழும்பு உதாசீனம் செய்து - புறம் தள்ளி - ஒதுக்கி - நடப்பது போலவே புலப்படுகின்றது.

ஆனால் இவ்விவகாரத்தில் அமெரிக்காவின் மனப்புளுக்கத்தை - எரிச்சலை - விசனத்தை - அமெரிக்க அதிகார வர்க்கம் இராஜதந்திர வார்த்தைகளில் காட்டமாகப் பிரதிபலிக்கத் தொடங்கியிருக்கின்றது என்றே பலரும் கருதுகின்றனர்.

யுத்தம் முடிவடைந்த சூழ்நிலையில் சிறுபான்மையினரான தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு இலங்கை தவறுமானால் அது மீண்டும் வன்முறைகள் தலைதூக்கும் நிலைக்கே இட்டுச்செல்லும் என்று கடந்த 11 ஆம் திகதி எச்சரிக்கை வெளியிட்ட அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக், யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள சுமார் மூன்று லட்சம் அகதிகளுக்கு உரிய சுதந்திரத்தை வழங்க இலங்கை அரசு முன்வரவேண்டும் என்றும் வற்புறுத்தியிருந்தார்.

இதேபோன்ற கருத்தை அடுத்த நாள் அமெரிக்க இராஜாங்கப் பேச்சாளர் வாஷிங்டனில் வலியுறுத்தினார்.

அதற்கு அடுத்த நாள் - கடந்த 13 ஆம் திகதி - புலம்பெயர் வாழ் அமெரிக்கத் தமிழர்களைச் சந்தித்த றொபேர்ட் ஓ பிளேக்கும், கொழும்புக்கான அமெரிக்காவின் விவகாரப் பொறுப்பாளர் ஜேம்ஸ் மூரும், தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து நல்லிணக்க உடன்பாடு காண்பது குறித்து புலம்பெயர் வாழ் தமிழர்கள் உள்ளிட்ட தமிழர் தரப்புடன் இலங்கை அரசு விரைந்து பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும் என வற்புறுத்தினர். நீதியை நிலைநாட்டி, சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் அதிகாரப் பரவலாக்கலுக்கான நல்லிணக்கத்துக்கு இலங்கை அரசு வராவிட்டால் நின்று, நிலைத்து, நீடிக்கும் நிரந்தரத் தீர்வு ஒன்றை அதனால் எட்டவே முடியாது என அவர்கள் அப்போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல லட்சம் தமிழ் அகதிகள் பற்றிய பிரச்சினையை மீண்டும் கடந்த 18 ஆம் திகதி பிளேக் எழுப்பினார். அந்த மக்களின் நடமாட்ட சுதந்திரம் பறிக்கப்பட்டிருப்பது தொடர்பான அமெரிக்காவின் கவலையை அவர் வெளிப்படையாக எடுத்துரைத்தார்.

இதன் பின்னர், அதற்கு அடுத்த நாள் - கடந்த 19 ஆம் திகதி புதனன்று - அமெரிக்காவின் அகதிகள் குடிமைநிலை மற்றும் புலம்பெயர்வுகள் தொடர்பான உதவி வெளிவிவகார அமைச்சர் எரிக் ஸ்வார்ட்ஸ் இதே வன்னி அகதிகள் நிலைமை குறித்து செய்தியாளர் கூட்டத்தில் அதீத கவலை வெளியிட்டுக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

''இலங்கையில் இடம்பெயர்ந்த மக்கள் அவர்களின் விருப்புக்கு மாறாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது குறித்து இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. சமீபத்திய மற்றும் எதிர்கால மழை குறித்து சிந்திக்கும்போது இவ்வாறு அந்த அகதிகளைத் தடுத்து வைத்திருக்கின்றமை எமக்குக் கவலையளிக்கின்றது. உலகின் சகல பகுதிகளிலும் இவ்வாறு இடம்பெயரும் மக்கள் தங்களின் மீள்குடியமர்வு குறித்துத் தங்களின் நலன்களின் அடிப்படையில் தாங்களே முடிவெடுக்கின்றனர்; தீர்மானிக்கின்றனர். ஆனால் இலங்கையில் மட்டும் அவர்களை அப்படித் தீர்மானிக்க விடாமல் முடக்கி, தடுத்து வைத்திருக்கும் நிலைமை நீடிக்கின்றது.'' - என்று அவர் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இதேசமயம், இந்த அகதிகள் எதிர்கொள்ளும் அவலங்கள் குறித்து அமெரிக்க உதவிச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் நேற்றும் சி.என்.என். செய்திச் சேவைக்குக் காட்டமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இப்படிக் கடந்த பத்து நாள்களுக்குள் அமெரிக்கத் தரப்பிலிருந்து இலங்கை விவகாரம் குறித்து அடுத்தடுத்து எழுப்பப்படும் கேள்விகள், கவலை தெரிவிப்புகள் குறித்து கொழும்பு அலட்டிக்கொண்டதாகவோ, கவனத்தில் கொண்டதாகவோ தெரியவில்லை.

புலம் பெயர்ந்த தமிழர்களுடன் இலங்கை அரசு பேசி, இணக்கம் காணவேண்டும் என்று கூறுவதற்கு றொபேர்ட் ஓ பிளேக் யார் என்ற சாரப்பட பிளேக்கைத் தாக்கிப் பேசும் சில கருத்துக்கள் இலங்கை அரசுத் தரப்பிலிருந்து பிரதிபலிப்பாக வெளிப்பட்டமையைத் தவிர, கொழும்பில் பிற மறுமொழி ஏதும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவின் இந்த அதீத சிரத்தை கணக்கில் எடுக்கத் தகுதியற்றது, தேவையற்றது என்றெல்லாம் கொழும்பு கருதுகின்றதோ என்னவோ......? அமெரிக்கப் பிரஜைகளாக இருந்துகொண்டு கொழும்பின் ஆட்சி அதிகாரத்தை ஆட்டிப்படைக்கும் தரப்புகளுக்குத்தான் எல்லாம் வெளிச்சம்.........!

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக.22

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலங்களில் தினமும் காலை 7 மணிக்கு பூசை ஆரம்பமாகி நடைபெறும். காலை 9.30 மணிக்கு கொடித்தம்ப பூசையும் முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையையும் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருதலும் இடம்பெறும்.

மாலைத் திருவிழாவில் பிற்பகல் 4 மணிக்கு கொடித்தம்ப பூசையும், 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருதலும் இடம்பெறும். இரவு 7 மணிக்கு அர்த்த சாமப் பூசையும் இடம்பெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 31 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சப்பறத் திருவிழாவும், முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். 2 ஆம் திகதி மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவடையும்.

புதிதாக உருவாக்கப்பட்ட திருமஞ்ச வெள்ளோட்டவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (50-204-86)

### அன்பால் ஆசி தந்தருள் தாயே!

| | | | |
|---|---|---|---|
| இத்தரையில் | வாழுமெம் | தமிழர் | வாழ்விங்கே |
| புத்தமுதாய் | மாறுநிலை | வேண்டும் | - சித்தமெலாம் |
| நின்பால் | வைத்தோம் | துர்க்கை | அம்மா |
| அன்பால் | ஆசிதந்(து) | அருள் | |
| தோல்வி | பலகண்டும் | துஞ்சா(து) | உழைக்கின்றோம் |
| சூழ்கலி | நீங்கத் | துதிசெய்தோம் | - நீள்விழியால் |
| கடைக்கண் | காட்டிக் | கருணை | செய்திடுவாய் |
| தடையற்ற | நல்லருள் | தா | |

ச. லலீசன், அச்சுவேலி.

## வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மூன்று பாடசாலைகளின் நூலகங்களைப் புனரமைக்க இலங்கைப் பெண் சாரணர் சங்கம் முன்வருகை

வடமராட்சி, ஒக.22

வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மூன்று பாடசாலைகளின் நூல் நிலையங்களை புனரமைப்புச் செய்ய ஸ்ரீலங்கா பெண் சாரணர் சங்கம் முன்வந்துள்ளது.

ஸ்ரீலங்கா பெண் சாரணர் இயக்கத் தலைவர் திருமதி அருந்ததி சந்திரதிலகா, செயலாளர் திருமதி சிறிமா பெரேரா ஆகியோர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட போது வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் பார்வையிட்ட இக் குழுவினர் நூல் நிலையப் புனரமைப்புக் கென மூன்று பாடசாலைகளைத் தெரிவுசெய்தனர்.

யாழ்.மேலதிகக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் சகிதம் பாடசாலைகளைப் பார்வையிட்ட இக் குழுவினர் நூல் நிலையப் புனரமைப்புக்கென பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை, கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் பாடசாலை, அம்பன் அமெரிக்க மிஷன் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளையும் தெரிவுசெய்தனர்.

இதன் பின்னர் இக்குழுவினர் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாராத சேவாச்சிரமத்திற்கு விஜயம் செய்த னர். இக்குழுவினரை வரவேற்ற சுவாமிசித்ரூபானந்தா அவர்களிடம் கருத் துத் தெரிவிக்கையில்.

சிங்கள மக்கள் நல்லவர்கள். பாசையைச் சமாளித்துக்கொண்டு செல்லுங்கள். சிங்கள மக்களுடன் கைகோர்த்து என்றும் வாழ விரும்புகின்றோம்.

பல வருடங்களுக்கு முன்பு பெண்கள் சாரணிய இயக்கத்தின் அப்போதைய தலைவர் தலைமையில் 40 சாரணியப் பெண்கள் தென் பகுதியிலிருந்து வந்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் தங்கியிருந்து இந்தச் சேவாச்சிரமத்தைக் கட்டும் பணியில் மூன்று தினங்கள் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் அன்றைய உதவியினால் கட்டடத்தின் சுற்றுப்புறத்தை 33 அடி உயரத்துக்கு அவ்வேளை கட்டக்கூடியதாக இருந்தது என்பதை அவர் நினைவு கூர்ந்தார்.

இக்குழுவினருக்கு சேவாச்சிரம மலர் அன்பளிப்புச் செய்யப்பட்டது. (50-236)

## விவசாயம் செய்ய அனுமதிக்குமாறு மண்டைதீவு விவசாயிகள் கோரிக்கை

நல்லூர், ஒக.23

மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தமது பகுதியில் இம்முறை விவசாயம் செய்ய அனுமதிக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 19 வருடங்களாக இங்கு பயிர்ச்செய்கை பண்ணமுடியாத நிலை இருந்து வருவதாகவும் இதனால் விவசாயிகள் பெரிதும் கஷ்டமுறுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை பெரும்பாலான உயர் பாதுகாப்பு வலயங்களில் விவசாயம் செய்ய அந்தப் பகுதி விவசாயிகள் அனுமதிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ள மண்டைதீவு விவசாயிகள் தமது பகுதிக்கும் விவசாயம் செய்வதற்கான அனுமதி வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-111)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி 07 | 23.08.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.ப. 10.52 வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | மு.ப. 07.39 வரை |
| சுபநேரம்: | 09.05 - 10.35 |
| ராகுகாலம்: | 04.35 - 06.05 |

விநாயகர் சதுர்த்தி

## பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ள வயல்களைத் தயார்செய்யும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஒக.22

யாழ்.குடாநாட்டில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

தற்போது பெய்த கடும் மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்தி வருகின்றனர்.

உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தியும் மாடுகள் மூலம் கலப்பைகளைப் பயன்படுத்தியும் வயல்களை உழுவதுடன் வளமாக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவருவதனை அவதானிக்க முடிகிறது.

இம்முறை பெரும்போக நெற்செய்கை வழமையைவிடவும் அதிகளவிலான வயல் நிலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த தரிசு நிலங்களைக் கூட பெரும்போக விதைப்புக்காக தற்போது விவசாயிகள் சீர்செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது. (04-224)

## பிரதேச செயலகங்களில் புதிய செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக.22

யாழ்.மாவட்டத்தில் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக 64 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

ஐ.நா.நிறுவனங்கள், சர்வதேச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் 360 மில்லியன் ரூபா செலவில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

யாழ்.அரசாங்க அதிபர் கே. கணேஷ் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம், போரூட், யுனொப்ஸ், கிரிஸ்ரியன் எயிட், ஜிரிசற், வேர்ல்ட் விசன், டிஆர்சி, யுன்.டி.பி., ஐ ஓஎம், யுன்.எச்.சி.ஆர், வைகுறோ, கரித்தாஸ்-கியூடெக் ஆகிய நிறுவனங்களினால் நிதி வழங்கப்பட்டு அபிவிருத்திகள் இடம்பெறுகின்றன.

இதில் வாழ்வாதார உதவித் திட்டங்கள், வெள்ள அனர்த்த நிவாரணம், உள்ளூர் நிறுவனங்களையும் மனிதவளங்களையும் பலப்படுத்தல், குடிதண்ணீர் வசதி மேம்பாடு, வீட்டுத் தோட்ட ஊக்குவிப்பு, மேலதிக உலர் உணவு வழங்கல், இடம்பெயர்ந்த மக்களுக்கான சமூக நலத்திட்டங்கள் உட்பட 23 வகையான நலச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (04-302)

## மீசாலை ரயில் நிலையத்தைப் புனரமைக்க மத்திய மாகாணசபை நடவடிக்கை

மீசாலை ரயில் நிலையத்தை முழுமையாக அபிவிருத்தி செய்துகொடுக்க மத்திய மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் வகையில் மத்திய மாகாணசபை இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக மாகாண சபையின் முதலமைச்சர் சரத் ஏகநாயக்க தெரிவித்தார்.

தனிப்பட்டவர்களினதும் தனியார் வர்த்தக நிலையங்களினதும் உதவிகளுடன் இந்தப் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திலிருந்து முன்னெடுக்கப்படவிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டம் நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் உரித்தான ஒரு வேலைத் திட்டப் பணியாகும். இந்த வேலைத் திட்டங்களின் முன்னெடுப்புகளுக்கு பொதுமக்கள் மூலமும் அவர்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள மத்திய மாகாண சபை எதிர்பார்ப்பதாகவும் முதலமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (50)

## மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் பயன்தரு மரங்கள் தறிக்கப்படுவதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக.22

கடந்த வாரம் பொதுமக்களின் மீள்குடியமர்வுக்கு கையளிக்கப்பட்ட தென்மராட்சி தெற்குப் பகுதியிலிருந்து பெருமளவு மரங்கள் தறிக்கப்பட்டு வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமது காணியினைத் துப்புரவு செய்வதற்குச் சென்ற பொதுமக்களே தமது காணிகளில் நின்ற வேம்பு, பூவரசு போன்ற மரங்களைத் தறித்துக் கொண்டு செல்வதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை வாகனங்களில் வருவோர் விறகுடன் மரங்களையும் தறித்து எடுத்துச் செல்வதாகவும் தெரிவித்த பொதுமக்கள் தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதி மக்களைத் தவிர ஏனையோரை இப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டாமெனவும் உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (04-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 வருடங்களுக்கு மேல் திருத்தப்படாத அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதி

## கவனிப்பார் எவருமில்லையெனப் பொதுமக்கள் விசனம்

அச்சுவேலி, ஓக.22

40 வருடங்களுக்கு மேல் திருத்தி அமைக்கப்படாமல் இருக்கும் அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதியைத் திருத்தி அமைக்குமாறு காலத்துக்கு காலம் கோரிக்கை விட்ட போதிலும் இதுவரை வீதியை திருத்தி அமைப்பகற்கு எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எணப் பொதுமக்கள் விசணம் தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதி என அழைக்கப்படும் 10 ஆம், 11 ஆம் வட்டார எல்லை வீதி நீண்ட காலமாக ஏறத்தாள 40 வருடங்களுக்கு மேல் திருத்தி அமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

அச்சுவேலி - யாழ்ப்பாணம் பிரதான வீதியையும், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியையும் இணைக்கும் பயித்தோலை வீதி பொருமளவில் போக்கு வரத்துக்கு பயன்படுத்தப்பட்டுவரும் வீதியாகும்.

இந்த வீதி நீண்டகாலமாக திருத்தி அமைக்கப்படாமல் இருப்பதால் மழை நேரங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. வீதியில் வெள்ள நீர் தேங்கி இருப்பதால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் பிரயாணம் செய்ய முடியாமல் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதோடு தமது பயணங்களை இடையில் நிறுத்தி வீட்டுக்கு திரும்பிச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிடுகின்றது.

பருத்தித்துறை பிரதான வீதியையும் அச்சுவேலி பிரதான வீதியையும் இணைக்கும் வீதியாக இருப்பதால் பிரதான வீதிகளில் தடைகள் ஏற்படுகின்ற வேளைகளில் பொதுப் போக்குவரத்துக்கும் இந்த வீதி பயன்படுத்தப்படுவதும் உண்டு. இந்த வீதியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்கள் இரண்டு அமைத்திருப்பதால் பார ஊர்திகள் சென்று திரும்புவதோடு பெருமளவில் வாகனப் போக்குவரத்தும் இந்த வீதியால் இடம்பெறுகின்றது.

நீண்டகாலமாக திருத்தி அமைக்கப்படாமல் இருக்கும் இந்த வீதியை திருத்தி அமைக்குமாறு வலி.கிழக்கு பிரதேச சபையிடமும் மாவட்ட நிர்வாகத்தினரிடமும் பல தடவைகள் பொது அமைப்புக்கள் கோரிக்கை விட்ட போதிலும் வீதியை திருத்தி அமைப்பதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் வடக்கின் வசந்தம் கூட இந்த வீதியை எட்டிப் பார்க்காமல் இருப்பது ஏன் எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (4-11)

# யாழ். பொது நூலகத்தால் நடத்தப்படும் வாசிப்புத் திறன் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.22

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். பொதுசன நூலகத்தால் நூலக விழிப்புணர்வு நிறுவனத்தின் வழிகாட்டலில் மாபெரும் வாசிப்புத்திறன் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி தரம் 5 வரை கல்வி கற்போர், தரம் 6 தொடக்கம் தரம் 10 வரை கல்வி கற்போர் என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் சகல பொருள் துறை சார்ந்த நூல்கள் காட்சிக்கு வைக்கவுள்ளதுடன் அந்நூல்களை கடந்த 15 ஆம் திகதிதொடக்கம் ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரை வாசிப்பதற்கு அனுமதிக்கப்படும் எனவும் பத்து வாரகாலம் வாரம் ஒரு நூல் வீதம் வாசிக்க வேண்டும் எனவும் யாழ். பொது நூலகர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கிழமையும் அதாவது ஞாயிறு - சனிக்கிழமை வரை ஒரு நூல் கட்டாயம் வாசிக்க வேண்டும். இதில் சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அவ்வாரம் வாசித்த நூல்கள் சார்பான கேள்விகள் மத்தியஸ்தர் ஒருவரால் கேட்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். எல்லா வார மதிப்பீட்டின் அடிப்படையில் மூன்று பரிசில்களும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

யாழ். குடாநாட்டின் சகல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் மேற்படி போட்டியில் பங்குபற்ற முடியும். இரவல் பெறும் அங்கத்தவராகவோ அல்லது சாதாரண வாசகராகவோ பிரதான நூலகத்தில் அல்லது கிளை நூலகத்தில் பதிந்திருத்தல் வேண்டும் எனவும் போட்டி பிரதான நூலகத்தில் மட்டுமே நடைபெறவுள்ளதாகவும் பிரதம நூலகர் தெரிவித்துள்ளார். (50-201)

# சமாதான வாரத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் வெவ்வேறு இடங்களில் ஐந்து கருத்தமர்வுகள்

வண்ணை, ஓக. 22

சமாதான வாரத்தை முன்னிட்டு சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துமான பணியகத்தால் நடத்தப்படும் கருத்தரங்குகளில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி, சரஸ்வதி சனசமூக நிலையத்தில் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.தனபாலன் இளைஞர்களிடையே நல்லிணக்கத்தை நோக்கிய விழிப்புணர்வு என்னும் பொருளில் கருத்தமர்வை நடத்துவார்.

அதேவேளை மாலை 3.30 மணிக்கு மேற்படி பொருளில் உடுவில், புதுமடம் கர்த்தர் கோயில் வளாகத்திலும் கருத்தமர்வு நடைபெறும்.

அத்தோடு இன்றுபிற்பகல் 3 மணிக்கு ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் சிறுவர்களுக்கான சமாதானக் கல்விவச் செயற்பாடு இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அல்லைப்பிட்டி, பிலிப்பு நேரியார் ஆலய வளாகத்தில் இளைஞர், யுவதிகளுக்கான செயற்பாடுகளும், 9 மணிக்கு சிறுவர்களுக்கான ''இயற்கையுடன் இணைவோம்'' என்னும் பொருளில் கருத்தரங்கும் நடைபெறும்.

அதேவேளை மாலை 3.30 மணிக்கு மல்லாகம் குளமங்கால் புனித சவேரியார் ஆலய வளாகத்தில் ''இளைஞர்களிடையே நல்லிணக்கத்தை நோக்கிய'' விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நிகழவுள்ளதாக பணியக ஒருங்கிணைப்பாளர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-160)

### தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்தில்

# தங்க நகைகள் அணிந்து வருவதை தவிர்க்குமாறு அடியார்களுக்கு அறிவுறுத்து

வலி.வடக்கு, ஓக. 22

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகவுள்ளது.

அதன் பொருட்டு ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்வதுடன் பெறுமதி வாய்ந்த உடைமைகளை எடுத்து வருவதையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

ஆலய உற்சவம் முடிவடைந்ததும் ஆலய சுற்றாடலில் தங்குவதையும் தேவையற்ற முறையில் நடமாடுவதையும் தவிர்த்து வீடுகளுக்கு உடனுக்குடன் செல்ல வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

கொடியேற்றம், கொடியிறக்கம் திருவிழாக்கள் பொது உபயமாக நடைபெறுவதினால் ஆலய உற்சவத்திற்கு பணம் கொடுக்க விரும்பும் அடியவர்களை ஆலயத்தினுள் இருக்கும் அலுவலகத்தில் கொடுத்து பற்றுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள வேண்டும் -

ஆலயத்தின் பெயரில் யாருக்கும் பணம் சேகரிக்கவோ பொருள்களை சேகரிக்கவோ அனுமதி வழங்கப்படவில்லை. எந்த பொருள்களையும் ஆலய அலுவலகத்தில் ஒப்படைத்து உரிய பற்றுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள வேண்டும் - என்றும் ஆலய நிர்வாகத்தினர் வலியுறுத்தி உள்ளனர். (அ-86)

# பொன் விழா ஆண்டு விளையாட்டுப் போட்டி

இணுவில், ஓக.22

பொன்விழா ஆண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு விழாப் போட்டி நாளை 23 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இணுவில் தியேட்டர் வீதியில் அமைந்துள்ள கலாஜோதி விளையாட்டு மைதானத்தில் நடைபெவுள்ளது. நிலையத்தின் தலைவர் த.பிரதீப் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

கடந்த 2 வாரங்களாக வெகு சிறப்பாக நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகளுக்கு இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக் கிளையின் முகாமையாளார் எஸ். பி. அரசகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (06-45)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் பொலிஸாரிடம் வகையாக மாட்டினார்

வலி.வடக்கு, ஓக.22

ஏழாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு இருந்த நபர் ஒருவர் பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸாரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

இவரிடம் இருந்து கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள், கசிப்பு மற்றும் விறகு உட்படபல்வேறுபொருள்களும் பொலிஸாரினால் கைப்பறப்பட்டதுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். குறிப்பிட்ட சந்தேக நபரை இரு வார காலத்திற்கு விளக்கமறியலில் வைக்கும் படி உத்தரவிட்ட நீதிவான் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்குப் பணித்தார். (50-86)


## காணியும் வீடும் விற்பனைக்கு

ஆனைக்கோட்டை மானிப்பாய் வீதியில் 5½ பரப்புக் காணியுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771994926 (S.T.நர்சன்), 0041244450315


# கணனிக் கற்கை நிறுவனத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.22

'ஈ சொப்ற்' கணனிக் கற்கை நிறுவனத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணிக்கு இல. 114, நாவலர் வீதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடத் தலைவர் கே.தேவராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தொலைக்கல்வி நிலைய இணைப்பாளர் கே. சிவராஜாவும் கௌரவ விருந்தினராக 'ஈ சொப்ற்' கணனிக்கற்கை நிறுவனப் பணிப்பாளர் டாக்டர் . டயன் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்வர். (50-201)

# மகளிர் அபிவிருத்தி நிறுவன விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 22

மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்ச்சியாக நடத்தும் விழிப்புணர்வு கருத்தரங்குத் தொடரில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ''இலங்கையில் சனநாயக நீரோட்டத்தில் பெண்களின் தலைமை'' எனும் தொனிப் பொருளில் தென். மட்டுவில் மாதர் சங்க மண்டபத்தில் அமர்வு இடம்பெறவுள்ளது.

இதில் நிலையப் பிரதிநிதிகளான வெளிக்கள உத்தியோகத்தர் செல்வி ஜெயக்குமார் சியாமளா, சமூக ஊக்குவிப்பாளர் திருமதி சிவநாதன் சர்மிளா ஆகியோரும் வளவியலாளர்களாக தேசியக் கல்வி நிறுவக விரிவுரையாளர் திருமதி தனலஷ்மி வில்வநாதன், சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர். (6)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.22

நல்லூர் ஸ்ரீசந்திர சேகரப்பிள்ளையார் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி நாளான நாளைக் காலை 7.30 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு விஷேட சாத்துப்படியும் உற்சவமும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சிவசம்புநாதன் (B.Sc., P.G.D.E.)

(முன்னாள் ஆசிரியர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி, யா/புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி)



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் தற்போது அமெரிக்காவில் வாழ்ந்தவருமாகிய ஆசிரியர் செல்லையா சிவசம்புநாதன் 19.08.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2009) சனிக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''பென்சன் வீடு'',
குப்பிழான்.

தகவல்: குடும்பத்தினர்.

## வல்லி சின்னப்பொடியன்



கைதடி நவபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி சின்னப்பொடியன் நேற்று (21.08.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முதலிச்சியம்மாவின் அன்புக் கணவரும் இரத்தினம் (பிரபல S.R கட்டட ஒப்பந்தகாரர்), தங்கதுரை (பிரான்ஸ்), கிருஷ்ணன், இராசம்மா (அமரர்), கனகா (பெல்ஜியம்), கந்தையா, இராசமணி, செல்லம்மா (அமரர்), சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பூரணம், கனகமணி, மரியரத்தினம், நாகராசா, தங்கராசா, சிவரஞ்சிதாதேவி, தம்பிராசா (C.E.B), சிவலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ்), பிரபா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2009) சனிக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவபுரம்,
கைதடி.

(88127)

தகவல்:
குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள ஹீரோ கொண்டா SS மோட்டார் சைக்கிள் (Np GQ தொடர் இலக்கமுடையது), பழமைவாய்ந்த மரப்பெட்டகம் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- இ.நாகராசா தேவி அச்சக ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0776994906





# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் வடமாகாணக் கணக்காளர் திரு.செ.உமாகாந்தன் அவர்களின் அன்புச் சகோதரி

## செல்வி கௌஷலா செல்வஸ்கந்தநாதன்

[உதவிக் கணக்காளர், Perfect Digital (Pvt) Ltd, Colombo - 07]

கடந்த (19.08.2009) புதன்கிழமை காலமாகிய செய்தி அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அமரரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.


கணக்கியல் பகுதி,
இலங்கை மின்சார சபை,
500, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சீமா (CIMA) வகுப்புக்களின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.டேவிற் வீதி யில் அமைந்துள்ள கலைக்கோட்டத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஐ.சி.பி.எஸ். பணிப்பாளர் எஸ்.சிவபாஸ்கரன் மங்கள விளக்கேற்றுவதையும், சீமா நிறுவனத்தின் தென்னாசிய மற்றும் மத்திய கிழக்குப் பிராந்திய முகாமையாளர் பிரட்ல் எமர்சன் விரிவுரையாற்றுவதையும், எம்சி.எஸ்.நிறுவனப் பணிப்பாளர் எஸ்.சிவாஸ்கரன், ஐ.சி.பி.எஸ்.பணிப்பாளர் எஸ்.சிவபாஸ்கரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்!- லக்ஸ்மன்)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய நால்வருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 22

அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றிச் சென்ற நான்கு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் அபர்ராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த திங்கள் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இதன் போது குறித்த நால்வருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தும், அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 10 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (04-207)

## பாதையைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 22

கைதடி- கோப்பாய் வீதி பாலத்தில் உள்ள தற்காலிகப் பாதை குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மோட்டார் சைக்கிளில் செல்ல முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் பெய்த கடும் மழையில் வெள்ளம் தேங்கிய பகுதிகள் சகதிகளாகக் காணப்படுவதால் மோட்டார் சைக்கிள்களில் இப்பாதையூடாகச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இப் பாதையைப் புனரமைக்க உரியவர்கள்




நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதியைச் சேர்ந்த பொதும்க்கள் கோரியுள்ளனர். (04-207)

## குடியிருக்காதவர்கள் மீதான நடவடிக்கை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக. 22

நாவற்குழி 300 வீடமைப்புத் திட்ட அரச காணிகளில் இதுவரை குடியிருக்காதவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளில் குடியிருப்பதற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு இதுவரை குடியிருக்காதவர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே நிறுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (04-207)

## நவீல்ட் பாடசாலையில் தையல் பயிற்சி

வலி.வடக்கு, ஒக. 22

கைதடி நவீல்ட் பாடசாலையில் தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவிகளையும் மற்றும் புதிதாக தையல் பயிற்சியைப்பெற விரும்பும் பெண்களையும் இப்பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்வதற்கு அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இப்பயிற்சி நெறியைப் பயில விரும்பும் அனைவரும் அதிபரிடம் பதிவு செய்யும்படி அதிபர் கேட்டுள்ளார். (04-86)

# யாழ். மாவட்டத்திலுள்ள பொதுச் சந்தைகளில் இடத்துக்கிடம் மாறுபட்ட வீதத்தில் வாடகை

### வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்

அச்சுவேலி, ஒக. 22

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொதுச் சந்தையில் இடத்துக்கிடம் மாறுபட்ட வீதத்தில் வியாபாரிகளிடம் இட வாடகை அறவிடப்படுவதுடன்; பொருள்களைக் கொண்டு சென்று மொத்தமாக விற்பனை செய்வோரிடமும் மாறுபட்ட வீதத்தில் வரி வீதம் அறவீடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொதுச் சந்தையில் உள்ளூராட்சி அமைப்பின் கீழ் இருக்கின்ற போதிலும் பெரும்பாலான சந்தையில் இடவாடகை மற்றும் பொருள் விற்பனை வரி அறவீடு தொடர்பாக எந்த விதமான பகிரங்க அறிவித்தலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுவதில்லை எனக் கூறப்படுகின்றது.

பொதுச்சந்தைகளை வருடத் தொடக்கத்தில் குத்தகைக்கு விடப்பட்டு விடுவதால் சந்தைக் குத்தகை எடுத்தவர்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு ஏற்ப சந்தையில் செயற்பாடுகளை முன்னெடுப்பது பொதுமக்களைப் பெருமளவில் நெருக்கடிக்கு உள்ளாக்குவதுடன் சந்தையில் வியாபாரம் செய்வோரையும் விளைபொருள்களைக் கொண்டுசென்று மொத்தமாக விற்பனை செய்வோரையும் பாதிப்புக்குள்ளாக்குவதாகப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்பவும் தங்களது தனிப்பட்ட இலாப நோக்கத்துக்கு ஏற்பவும் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக உள்ளூராட்சி அமைப்புக்கள் கண்டும் காணாமலும் இருந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

பொதுச்சந்தைகளில் மேற்கொள்ளப்படும் அறவீடுகள் மற்றும் கொடுப்பனவு தொடர்பாக பகிரங்கமான அறிவித்தல்கள் வைக்கப்பட்டிருப்பின் அதனைப் பின்பற்றுவது குத்தகைக் காரர்களுக்கும், சந்தைகளில் வியாபாரம் செய்பவர்களுக்கும் பொருள்களைக் கொண்டு சென்று மொத்தமாக விற்பனை செய்பவர்களுக்கும் வசதியாக இருக்கும் எனப் பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொதுச்சந்தைகளில் நடைபெறும் மொத்த விற்பனையின் போது ஏலம் கூறி விற்பனை செய்வது பொருள்களை கொண்டு சென்று விற்பனைக்கு வசதியாக இருக்கும் என்றும்,

எனினும் சில சந்தைகளில் அந்த நடைமுறை புறக்கணிக்கப்பட்டு முகவர் கள் பொருள்களைத் தனிப்பட்ட முறையில் கொள்வனவு செய்து விலை கூட்டி விற்கும் நடைமுறையே சாதாரணமாகக் காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-11)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் தபாலகங்களை புனரமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 22

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் குடாநாட்டில் உள்ள அஞ்சல் நிலையங்களைப் புனரமைக்கவும் புதிதாக அவற்றினை மீளக் கட்டியெழுப்புவதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்தகவலை யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குடாநாட்டில் உள்ள அஞ்சலகங்கள் இரண்டு வருட காலத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

குடாநாட்டில் உள்ள முப்பது தபாலகங்களில் ஏழு வரையான தபாலகங்கள் மட்டும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன. ஏனைய தபாலகங்கள் தனியார் கட்டடங்களிலேயே இயங்குகின்றன.

அத்துடன் தபால் கட்டடங்களை அமைப்பதற்கு சிலர் தமது வெறும் காணிகளை அன்பளிப்பாகவும் வழங்கியுள்ளனர். வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சங்கானை, அச்சுவேலி, கைதடி, சுன்னாகம், கொடிகாமம் போன்ற பகுதிகளில் இந்தக் காணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் காணிகளில் தபாலகங்களை புதிதாக அமைக்கவும் மற்றும் சில தபாலகங்களை மீளப் புனரமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இரண்டு வருட காலத்துக்குள் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (04-224)

# கட்டுவன், ஏழாலைப் பகுதிகளில் இரவு நேரத்தில் மரக்கறிகள் திருட்டு

வலி.வடக்கு, ஒக.22

ஏழாலை, கட்டுவன் பகுதிகளில் உள்ள தோட்டங்களில் மரக்கறி வகைகள் நாளாந்தம் திருடப்பட்டு வருவதாக அப்பகுதி தோட்டச் செய்கையாளர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுள்ள தோட்டக்காரர்களின் உற்பத்திப் பொருள்களே இவ்வாறு இரவு நேரங்களில் இனந்தெரியாதவர்களால் களவாடப்பட்டு வருகின்றன.

இரவு நேரங்களில் இடம்பெறும் இத் திருட்டுக்களையிட்டு அப்பகுதியில் தோட்டச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இத்திருட்டை எந்த வகையில் தடை செய்வது எனத் தெரியாது திண்டாடி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இரவு நேரத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதினாலும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்கு அண்மையாகத் தோட்ட நிலங்கள் காணப்படுவதினாலும் இரவுக் காவல் கடமையில் விவசாயிகள் ஈடுபட முடியாத நிலைமை காணப்படுவதனால் திருட்டைத் தடுக்கமுடியாதுள்ளதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இத்திருட்டுக்களைத் தடுக்க உரியவர்களால் நடவடிக்கையெடுக்கப்பட வேண்டியது அத்தியாவசியம் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (04-86)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் கடல்சார் மூன்றுநாள் பயிற்சி நெறி

வண்ணை, ஒக.22

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் வெளிக்களப் பயிற்சி நெறிகளை வழங்கக் கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரிகளின் பிராந்தியப் பணிமனைகள் தீர்மானம் எடுத்திருப்பதாக யாழ்.கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரி உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிராந்தியங்களில் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் வெளிக்களப் பயிற்சிகள் மூன்று தினங்கள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சி நெறிகளில் வலை திருத்துதல், வெளி இணைப்பு இயந்திரம் பழுதுபார்த்தல், பராமரிப்பு ஆகிய பயிற்சி நெறிகள் வழங்கப்படும். முடிவில் உணவுப்படியாக உள்ளீடும் வழங்கப்படும்.

பயிற்சியாளர்களின் விவரங்கள் யாழ்.கடற்றொழில் திணைக்களப் பரிசோதகர்களால் மேற்கொள்ளும் நடவடிக்கை மூலம் ... ன - என்றார். (04-160)

## கடும் மழை காரணமாக விவசாயப் பயிர்கள் பாதிப்பு

வலி.வடக்கு, ஒக. 22

யாழ்.குடாநாட்டில் கடந்த இரண்டு நாள்களாக பெய்த கடும் மழை காரணக தோட்டச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேட்டு நிலப் பயிர் செய்கையில் ஈடுபட்ட மரக்கறிச் செய்கையாளர்களே மழையினால் அதிகம் பாதிப்புக்குள்ளாகியதாகக் கூறப்படுகின்றது.

வெங்காயம், குரக்கன், சாமை, தினை போன்ற செய்கைகளில் ஈடுபட்டவர்களின் பயிர்கள் மழையினால் பாதிப்படைந்துள்ளன. வெங்காயத்தை அறுவடை செய்து தோட்ட நிலத்தில் வைத்தவர்களின் வெங்காயங்களும் மழைநீரினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இதே போன்று சாமை, குரக்கன், தினை போன்ற பயிர்களும் அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில் மழை காரணமாக நிலத்தில் சரிந்துள்ளமையால் கதிரின் மணிகள் கொட்டப்பட்டும் எறும்புகளின் தாக்கத்துக்குள்ளாகியும் சேதம் அடைந்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (04-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களின் கேள்விகளால் திக்குமுக்காடுகின்றாராம் அமைச்சர்!

கொழும்பு,ஓக.22

அமைச்சரவைப் பேச்சாளராகச் செயற்படுவதில் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார் என்று தெரியவருகின்றது.

அவர் தாம் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் குறித்து அமைச்சரவையின் சிரேஷ்ட அமைச்சர்களுக்கு முறைப்பாடுகளைச் செய்துள்ளார் என்றும் தெரியவருகிறது.

குறிப்பாக அமைச்சர்கள் சிலரின் அடாவடித்தனங்கள் குறித்து ஊடகவியலாளர்கள் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுக்கின்றபோது தாம் கையாலாகாதவராக இருக்கவேண்டி ஏற்படுகிறது என்று ஊடகத்துறை அமைச்சர் குறைப்பட்டுக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் அடாவடித்தனங்கள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், முறைகேடுகள், தவறுகள் ஆகியவற்றுக்கு அமைச்சரவைப் பேச்சாளர் என்ற வகையில் தாம் ஊடகவியலாளர்களுக்குப் பதிலளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் என்று ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா ஏனைய சிரேஷ்ட அமைச்சர்களுக்கு வழங்கிய முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார் என்று தெரியவருகிறது.

என்ன பதில்களை ஊடகவியலாளர்களுக்கு வழங்குவது என்று தெரியாமல் தாம் இக்கட்டில் பல தடவைகள் மாட்டுப்பட்டு இருக்கின்றாரென்று அவர் கவலைப்பட்டுக்கொண்டார் எனவும் தெரியவருகிறது. தமது இக்கட்டான நிலைமை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பல சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்திய போதிலும் ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்கிறார் என்றும் அவர் சிரேஷ்ட அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டு சென்றிருக்கிறார்.

நிலைமை இவ்வாறு தொடர்ந்து இருக்குமானால் எதிர்காலத்தில் அமைச்சரவைப் பேச்சாளராகத் தாம் செயற்படப்போவதில்லை என்றும் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா சிரேஷ்ட அமைச்சர்களுக்குத் தெரிவித்துள்ளார் என்றும் அரச வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (சி)

# அகதிகளுக்கு என்று கூறி மன்னாரில் வர்த்தகர்களிடம் நிதி திரட்டிய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு,ஓக.22

அகதி முகாம்களில் உள்ள மக்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கென வர்த்தகர்களிடம் இருந்து நிதி சேகரித்தார் என்று கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மன்னார் பொலிஸாரால் கடந்த 17ஆம் திகதி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் வடமத்தியப் பிரதேசத்தின் பொலிஸ் நிலையம் ஒன்றில் சேவையாற்றியவர் என பொலிஸார் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மன்னார் எருக்கலம்பிட்டி மற்றும் வேறு சில பகுதிகளில் உள்ள மீன் வியாபாரிகள் ஏனைய வியாபாரிகளிடமிருந்து பல சந்தர்ப்பங்களில் நிதி சேகரித்தார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைதாகும்வேளை, அவர் வைத்திருந்த நிதி சேகரிப்புத் தொடர்பான பட்டியல் ஒன்றைக் கிழிக்க அவர் முயற்சி செய்தார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர் விளக்கமாறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், அவரை அடையாள அணிவகுப்புக்கு உப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## அங்குரார்ப்பணக்கூட்டம்

கெருடாவில் தெற்கு அம்பிகை சமுக அபிவிருத்திச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 16ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அம்பிகை கல்வி மன்றில் கிராம அலுவலர் கே.வன்னிமரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் செஞ்சிலுவைப் பிரதிநிதியும், ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு பயனாளிகளால் மேற்படி சபைக்கு நிர்வாக சபை உறுப்பினர்களையும் தெரிவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (204- 253)

ஓம் விராட் விஷ்வ பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

நிகழும் விரோதி வருடம் ஆவணி மாதம் 7ஆம் நாள் (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 07 மணி 55 நிமிடம் தொடக்கம் 10 மணி 40.நிமிடம் வரும் கன்னி லக்கினமும் அமிர்தசித்த யோகமும் வளர்பிறை சதுர்த்தசி திதியுடன் கூடிய சுபவேளையில்

திரு.திருமதி பேரானந்தன் தம்பதியரின் ஏக புதல்வன் விஸ்வானந் அவர்களுக்கும்

திரு.திருமதி கனகசூரியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரி தனுஜா அவர்களுக்கும்

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள துணையுடன் யா/வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் (நாச்சிமார் கோயில்) மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி ச.பேரானந்தன்
கிழக்கு மாகாண பொது நிருவாக அமைச்சு
முன்னாள் உதவி அரச அதிபர் (நெடுந்தீவு)

திரு.திருமதி இ.வித்திஆனந்தன் - ஆசிரியர்
17 (53), நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 2225752.

திரு.திருமதி ந.கனகசூரியம்
(இ.போ.சபை, வாகரை).

44/2B, மைக்கய்சர் வீதி,
உவர்மலை, திருகோணமலை.
தொ.பே.இல.: 026 2223111

(88016)

# அரசைப் பாதுகாப்பதற்காகவே விமர்சனங்களை மேற்கொள்கிறேன்

## வாசுதேவ நாணயக்கார விளக்கம்

கொழும்பு,ஓக.22

அரசைப் பாதுகாப்பதற்காகவே விமர்சனங்களை மேற்கொள்கிறேன் என்று நவ சமசமாஜக்கட்சித் தலைவரும், ஜனாதிபதியின் ஆலோசகரும், மூத்த அரசியல்வாதியுமான வாசுதேவ நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

வன்னி முகாம்களில் அந்தரிக்கும் தமிழ் அகதிகளின் பேரவலம் குறித்து வாசுதேவா ஊடகம் ஒன்றுக்கு பேட்டி வழங்கியிருந்தார். அந்தப் பேட்டியில் அவர் அரசைக் கடுமையாக சாடியிருந்தார். அவரது அந்த விமர்சனங்கள் குறித்து அரசு விளக்கம் கோரியிருந்தது.

போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும அரசு சார்பாக எழுத்துமூலம் வாசுதேவாவிடம் விளக்கம் கோரியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் நற்பெயருக்கும், செல்வாக்குக்கும், கீர்த்திக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் பேட்டி வழங்கியது ஏன் என்று வாசுதேவாவிடம் அவர் கோரியுள்ளார்.

அதற்கு நேற்று பதில் அளித்துள்ள வாசுதேவா, ''அரசைப் பாதுகாப்பதற்காகவே விமர்சனங்களை மேற்கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார். அவர் எழுத்து மூலம் இது தொடர்பில் அரசுக்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-



நான் அரசுக்கு உதவி செய்வதற்காகவே விமர்சனங்களை மேற்கொள்கிறேன். அரசைப் பாதுகாப்பதற்காகவே விமர்சிக்கிறேன். அரசின் மேலான கவனத்தை வன்னி அகதிகள் மீது திருப்புவதற்காகவே விமர்சித்துள்ளேன். ஜனாதிபதியின் ஊதுகுழலாக இருக்க நான் விரும்பவில்லை. அதுவே ஜனாதிபதியின் விருப்பமுமாகும். உண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், அரசையும் காப்பாற்றுவதற்கான விசுவாசமான நடவடிக்கைகளே எனது விமர்சனங்களாகும் என்றார். (சி)


## காணி விற்பனைக்கு

மீசாலை மேற்கு, கனகசுந்தரம் வீதி (ஏ-9 வீதிக்கு அருகாமையில்) இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0778697075

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக்கிலான பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் மீள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.
இல.6, கனகசபைலேன், சிவலிங்கப்புளியடி, K.K.S றோட், யாழ். தொ.பே.: 021 2228680


# இறுதியாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.22

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் அணிக்கு 7பேர் கொண்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன எனக் கழகத்தின் செயலாளர் த.வேணுகானன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் நடைபெறும் திகதி தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (50)

## பதவி வெற்றிடம்

யாழ்-மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதவி: எழுதுநர்
சம்பளக்குறியீடு: 302/15
சம்பள அளவுத்திட்டம்: 9450 - 11000
75x10 - 80x10

தகைமைகள்
* கூட்டுறவுப் பணியாளரின் 16ஆவது சம்பளத்திட்டத்தில் லிகிதர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது
* க.பொ.த. (சாதாரண தரத்தில்) கணிதம் / வர்த்தக எண்கணிதம் / எண்கணிதமும் / சிங்களம் / தமிழ் பாஷை உட்பட 6 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியும் கூட்டுறவுச் சங்க லிகிதர் பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.
* மேற்படி தகைமையுடன் மேலதிகமாக கணனி அறிவும் திறனும் அவசியம் இருத்தல்வேண்டும்.

வயதெல்லை:
* 18-45 வரை
* தற்போது கூட்டுறவுச் சங்கத்தில் சேவையிலுள்ளவர்களுக்கு உச்சவயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கங்களினூடாக அனுப்புதல்வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுத்துமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை மாத்திரம் பூர்த்தி செய்து பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தலைவர், யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்ற முகவரிக்கு அனுப்புதல்வேண்டும். விண்ணப்பப் படிவங்களை ரூ.10 செலுத்தி எமது சங்க அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி: 07.09.2009

தலைவர்,
யா/மா/த/பா/உ/கூ/சங்கம்.

(சி/560408)

## 60ஆவது பிறந்த நாள் வாழ்த்து



திரு.Dr.ந.கிருஸ்ணராசா
(சுதேச வைத்தியசாலை, சுன்னாகம்)
இன்று (22.08.2009) சனிக்கிழமை தனது 60ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் அவரைப் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
(88041)

வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## யாழ்.அத்தியடிப் பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி திருவிழா - 23.08.2009 (ஞாயிறு)



காலை 8.00 மணிக்கு எம்பெருமானுக்குச் சங்காபிஷேகம் ஆரம்பமாகும்.

பிற்பகல் 4.00 மணிக்கு எம்பெருமானுக்கு விசேட பூசைகள் நடைபெற்றுத் தொடர்ந்து அடியார்களால் நடத்தப்படும் சக்தி கணபதி தீப பூசையும் வெளிவீதியுலாவும் இடம்பெறும்.

குறிப்பு: சக்தி கணபதி தீப பூசை செய்ய விரும்பும் அடியார்கள் ஆலய அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்

### மணவாளக் கோல விழா 24.08.2009 (திங்கள்)

காலை 8.00 மணிக்கு எம்பெருமானுக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகும்.

பிற்பகல் 4.00 மணிக்கு எம்பெருமானுக்கு விசேட பூசைகள் நடைபெற்றுத் தொடர்ந்து திருஊஞ்சலும் வெளிவீதியுலாவும் இடம்பெறும்.

- ஆலய நிர்வாக சபை

(சி/560404)

# கட்டாக்காலி நாய்களால் வீதி விபத்துகள் அதிகரிப்பு

கோப்பாய்,ஓக.22

வலி.கிழக்குப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் வீதிகளில் அடிக்கடி விபத்து ஏற்படுவதுடன் நாய்க்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

தற்போது நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு சட்டத்தில் இடமின்மையால் நாய் வளர்ப்பவர்கள் உரிய காலத்தில் பெண் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை வழங்குவதன் மூலமே இவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (59-72)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



தம்பிஐயா குணபாலசிங்கம்

தோற்றம் 22.02.1939
மறைவு 28.08.2003

திதி: 22.08.2009

பூத்தீர் குணத்தின் குன்றமாய்
காத்தீர் காருண்ய மூர்த்தியாய்
வாழ்ந்தீர் வையத்துள் வாழ்வாங்கு
நீத்தீர் நீங்காப் புகழ்பரப்பி
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறாது உங்கள் மறைவின் துயரம்.

நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்.

(88104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகரில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது ... கப்பட்ட படங்கள். மழலைகளின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் மழலைகளின் சைக்கிள் ஓட்டப் போட்டியை மூன்றாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்த குமார் சிறார் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: டர்ணிகன்)*

### இலங்கைக் கிரிக்கெட் சபை நடத்தும்

## மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐவர் தெரிவு

வலி.வடக்கு,ஓக.22

யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அங்கத்தவர்கள் ஐந்து பேர் கிரிக்கெட் அமைப்பினால் நடத்தப்படவுள்ள மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

திருகோணமலையில் நடைபெறவுள்ள இப்பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் வெகுவிரைவில் அங்கு செல்லவுள்ளார்கள்.

25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இப்பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இப்பயிற்சி முகாம்கள் வடக்கு, கிழக்கில் நடைபெறாமையால் நூற்றுக்கணக்கானவர்கள் இத்தகைய வாய்ப்புகளை இழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள ப... முகாம், பரீட்சை என்பவற்றில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் மட்டுப்படுத்திய அளவில் கலந்துகொள்ளவுள்ளார்கள். (50-86)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் கழகங்களுக்கிடையில் நடத்தப்படவுள்ள (ஆண்/பெண்) சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் 56ஏ, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (50)

## மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை 4 விக்கெட்டுகளால் வென்றது சுன்னாகம் யங்ஸ்ரார்

வலி.வடக்கு,ஓக.22

அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 4 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றுள்ளது.

அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் 15.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஜனார்த்தனன் 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சதீஸ்கண்ணா 4 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

97 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 11 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. சதீஸ்கண்ணா 56 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த யாழினியன் 4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (50-86)

## வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான தடகள, குழுநிலைப் போட்டிகள் ஒத்திவைப்பு

வலி.வடக்கு,ஓக.22

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வடமாகாண மாவட்டங்களுக்கு இடையே அடுத்த மாதம் முதல் வாரம் நடைபெறுவதாக இருந்த தடகளப் போட்டிகள் மற்றும் குழுநிலைப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியுடன் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பைத் தொடர்ந்து இந்தப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முற்பகுதியில் தேசிய மட்டத்திலான மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள், தடகளப் போட்டிகள் என்பன இடம்பெறுகின்றமை ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டது.

அத்துடன் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டி களை நடத்துவதற்கு வேண்... முழுமை யான வசதிகள் இல் லா... மற்றும் விளையாட்டுச் சாதனங்க...ன் பற்றாக்குறை ஆகியன தொடர்பா கவும் ஆளுநரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களுக்கு இடையே நடைபெறவிருந்த போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரகைப் புனரமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படியும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (50-86)



அச்சுவேலி மத்திய கல்லூரியின் 19 வயதுப் பிரிவு கரபந்தாட்ட அணியினர் யாழ். மாவட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதோடு, அண்மையில் வடக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற போட்டியிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றுத் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர். அணியில் கலந்துகொண்ட வீரர்களைப் படத்தில் காணலாம். கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், விளையாட்டுப் பயிற்சியாளர் ஆகியோருடன் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் என்.முருகதாஸ் காந்திம... அமர்ந்திருப்பதைக் காணலாம். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்.)*

## சஜீவன் 129 ஓட்டங்களை விளாச வெற்றியீட்டியது யாழ்.இந்து அணி

வலி.வடக்கு,ஓக.22

சஜீவன் 89 பந்துகளில் 129 ஓட்டங்களை விளாச, மதுசன் ஓர் ஓட்டத்தைக் கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்ற 'சுப்பசிக்ஸ்' போட்டி ஆட்டம் ஒன்றில் 197 ஓட்டங்களினால் இலகுவாக வெற்றிபெற்றது யாழ். இந்துக் கல்லூரி.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்ற 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 'சுப்பசிக்ஸ்' கிரிக்கெட் போட்டியின் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சஜீவன்ஏழு ஆறுகள், பதினைந்து நான்குகள் உட்பட 129 ஓட்டங்களை விளாசினார்.

257 ஓட்டங்களை ... இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல் லூரி 20.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மதுசன் 4.3 ஓவர்கள் பந்துவீசி முதல் நான்கு ஓவர்களையும் ஓட்டம் எதுவுமின்றி வீசி ஓர் ஓட்டத்திற்கு நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (50-86)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்





விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

**சிறிநதியா நகைமாளிகை**
01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**இணைநிறுவனம் -**
**சிறிநதியா நகைமாளிகை**
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீள் எழுச்சிக் கிராமா[illegible] தெரிவு

வேல[illegible], ஓக.22

மீள் எழுச்சிக் கிராமமா[illegible] தற்பொழுது வேலணைப் பிரதேச செ[illegible]லர் பிரிவில் வேலணை கிழக்கு, ஜே/14 கிராம அலுவலர் பிரிவும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் கோட்டை, ஜே/81 கிராம அலுவலர் பிரிவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

(203-167)

# பொலிஸாரின் அராஜகங்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

கொழும்பு, ஓக. 22

அண்மைக் காலமாக பொதுமக்கள் மீது பொலிஸாரால் கட்டவிழ்த்துவிடப்படும் அராஜகச் செயல்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அங்குலானை இளைஞர் படுகொலை மற்றும் தகவல் தொழில்நுட்ப மாணவர் மீதான தாக்குதல் சம்ப வங்கள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயல்களால் சட்டம், ஒழுங்கு மீதான மக்களின் நம்பிக்கை குறைவடையும் என்றும், நாட்டில் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பொலிஸ்மா அதிபர், சட்ட மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது. (சி)

# ஊவா முதலமைச்சராக சசிந்திர ராஜபக்ஷ

ஊவா ம[illegible]காணசபையின் முதலமைச்சராக சசிந்திர ராஜபக்ஷ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கெண்டார்.

நடந்து முடிந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட கதிர்காம தேவாலயத்தின் தியவதன நிலமே சசிந்திர ராஜபக்ஷ ஒரு லட்சத்து 36ஆயிரத்து 697 விருப்பு வாக்குகள் பெற்று முதலமைச்சராகும் தகுதி பெற்றார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் மகாகண சபை யின் அமைச்சர்களும் பதவி ஏற்றனர்

(அ- 04)

# தொலைத் தொடர்பு கோபுரத்துக்கு கொக்காவிலில் அடிக்கல்

கொழும்பு,ஓக.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்காவிலில் 172 மீற்றர் உயரமான தொலைத் தொடர்புக்கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் கடந்த 18ஆம் திகதி நடப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷவும் ஊடகத்துறை அமைச்சரான அனுரபிரியதர்ஷன யாப்பாவும் அடிக்கற்களை நாட்டினர்.

400மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தக் கோபுரத்தின் ஊடாக வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் தொலைத்தொடர்பு சேவையையும் தொலைக்காட்சி சேவையையும் சீராக்க முடியும் என தெரிவிக்கப்பட்து.

இந்தக் கோபுரத்தை ஊடக அமைச்சும், ரெலிக்கொம் நிறுவனமும் இணைந்து அமைக்கின்றன. (அ-1)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.22

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையினர் வழங்கும் ''வள்ளி திருமணம்'' இசைநாடகம் இடம்பெறவுள்ளது.

(201)

# 3 நாள்களில் உண்டியல் விற்பனை மூலம் ரூ. 9 ஆயிரம் கோடி டொலர் இலங்கைக்கு

## வெளிநாட்டு முதலீட்டாளர் நம்பிக்கை வைத்ததின் விளைவாம்

கொழும்பு, ஓக. 22

கடந்த மூன்று தினங்களில் திறைசேரி உண்டியல் விற்பனை மூலம் இலங்கைக்கு 9 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது - என்று ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் நாடாளுமன்றக் குழு அறையில் நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையின் பொருளாதரக் கட்டமைப்பின் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர். பொருளாதாரம் சிறந்த முறையில் இருப்பதன் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் பயமின்றி முதலீடு செய்யும் நிலை உருவாகியுள்ளது.

அதனால்தான் பெரும் எண்ணிக்கையிலான முதலீட்டாளர்கள் இலங்கை மீது தமது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைக்கு பெருந்தொகையான வெளிநாட்டுப் பணம் கிடைத்துள்ளதால் தனியார் வங்கிகளிடம் கடன் பெறவேண்டிய தேவை ஏற்படாது. தனியார் வங்கிகளும் தங்களது வியாபார நடவடிக்கைகளை சிறப்பான முறையில் முன்னெடுக்கலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி மூலம் இவ்வருட இறுதியில் வட்டிவீதம் மேலும் குறைவடையும். சுமார் 9 வீதம்வரை குறையும் என எதிர்பாக்கமுடியும். இதனால் தொழில் வாய்ப்புக்கள் மென்மேலும் அதிகரிக்கும் - என்றார். (அ-சி)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தொம்மைப்பிள்ளை அருளப்பு**



தோற்றம் 15.07.1923

மறைவு 22.08.1999

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் உங்களை மறவோம்"

விண்ணில் வாழும் இறைவா எம் அன்புத் தந்தை வழியாக நீர் செய்த நன்மைத் தனங்களுக்கு நன்றி கூறுகின்றோம். உமது அளவு கடந்த அன்பினால் அவரது ஆன்மாவுக்கு ஆறுதல் அளித்து இன்பவான் வீட்டில் இடமளித்திட உம்மை இறைஞ்சுகின்றோம்.

(88048)

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு.

2, அலெக்சாண்ரா தெரஸ், கொழும்பு - 6. 0112552627

அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 | 23 |
| 09 | 07 |
| 1941 | 2009 |



அமரர்

**சிதம்பரப்பிள்ளை சின்னராசா**

( ஓய்வுபெற்ற பஸ் நடத்துநர், C.T.B. கோண்டாவில் டிப்போ)

மாதம் ஒன்று ஆனதே- ஆனால்
உங்கள் மதிமுகம் மறக்கவில்லை
தேடித்தேடிப் பார்க்கின்றோம்- உங்கள்
வரவுதனை ஏமாற்றம் எமக்கையா
இறைவன் திருவடியில்- உங்கள்
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வம் சி. சின்னராசா சிவபதம் அடைந்த செய்திகேட்டு எமது துயரத்தில் பங்கு கொண்டு எமக்கு பல உதவிகள் செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (22.08.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (560402) குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு ஐக்கியமான நினைவஞ்சலி



மனம் மகிழ 27.07.1940

மனம் நெகிழ 18.08.2004

திதி: திருதியை 22.08.2009

**அமரர் பொன்.நடேசன்**

(இளைப்பாறிய அதிபர்)

"வை[illegible]த்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வா[illegible]றையும் தெய்வ மானீர்"

*நீங்கள் இல்லாத உலகத்தில் நிம்மதி இல்லை*
*உங்கள் நிழல் இல்லாத இல்லத்தில் நிறைவும் இல்லை*
*ஆயிரம் உறவுகள் எம்மைத் தேடி வந்தாலும்*
*உங்கள் உறவுக்கு ஈடாகாதே!*
*வாழ்வு இல்லை; வளம் இல்லை சந்தோஷம் இல்லை*
*இங்கு வாழும் வரை எமக்கு நிம்மதியும் இல்லையே!*
*"மகன் , எனது அப்பா ஒரு கனவான்*
*கற்பனையிலும் காணமுடியாத ஒரு தந்தை என்பான்"*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

என்றும் நினைவில்: குடும்பத்தினர்.

## மணமக்கள் தேவை

*கௌரவமுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் ஆண், பெண் இருபாலாரிலும் உண்டு. சைவபோசனங்களிலும் உண்டு. ஆசிரியர், வங்கி, அரச திணைக்களங்களில் நிரந்தர உத்தியோகம் புரிபவர், பட்டம் பெற்று தொழிலை எதிர் பார்ப்பவர் விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்புடன் குடும்ப விவரம், நிபந்தனைகள் யாவும் முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*தொடர்பு: பொ.ஐயம்பிள்ளை,ஓய்வுபெற்ற ஆசிரியரும் சோதிடரும், குப்பிளான், [சந்திக்கு அருகில்], ஏழாலை.*

## தவறிவிட்டது

*சங்கரத்தைக்கும் கந்தர்மடத்திற்கும் இடையில் கடந்த 17.08.2009 திங்கட்கிழமை சிவப்புநிற பாடசாலை பை ஒன்று தவறிவிட்டது. அந்த பையினுள் முக்கியமான திறப்பும், அடைவுப் பத்திரமும் உள்ளது. கண்டெடுத்தவர்கள் க.சிவகுமாரன், 117/2, அரசடி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியுடனோ அல்லது 2228779 என்ற தெலைபேசி எண்ணுடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.* (88049)

## வாடகைக்கு அறைகள்

**மாணவர்களுக்கு மட்டும் யாழ்.மருத்துவ பீடத்துக்கு முன்பாக உணவு வசதிகளுடன் அறைகள் வாடகைக்கு உண்டு.**

தொடர்பு:

**5/6, கருவப்புலம் லேன், ஆ[illegible] ரோட், [illegible]**

(88159)

## முதலாம் ஆண்டு நினைவுகள்....



**அமரர் யோகம்மா நடராசா**

உலகிலே எம்மை பூக்கச்செய்து
உயர்வோடு எம்மை வளர்த்தெடுத்து
அன்புடன் உங்களை அரவணைக்கும் காலத்தில்
காலனவன் உங்களைக் கவர்ந்து
இன்றுடன் ஓராண்டம்மா!
உடலால் எம்மைப் பிரிந்தாலும்
உள்ளத்தில் எம்மைப் பிரியமுடியாதம்மா!

(88039)

கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை வல்லிபுரம்

மந்துவில், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் கச்சார் வெளி, பளையை நிரந்தர வசிப்பிடமாகவும் நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வல்லிபுரம் 20.08.2009 வியாழக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் வல்லிபுரம் மனோன்மணியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி (பளை), சிவசுப்பிரமணியம் (பளை), காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் மற்றும் சுசேலவைகுந்தராசன் (இத்தாலி), தர்மபுத்திரன் (தபால் ஊழியர், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), புவனேந்திரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12, அன்பரசன் வீதி, நீர்கொழும்பு. (சி/560403)

தகவல்: தர்மபுத்திரன் ரஞ்சன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



பண்டத்தரிப்பு ஆயுள்வேத கிராமிய வைத்தியசாலைக்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்று.

விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பேராசிரியர் சுப்பிரமணியம் பவானிக்கு பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கு. வரதராசா மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும், அருகில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் க. சிவராசா, பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி ஞா. தேவச்சந்திரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (130)



அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்க வளாகத்தில் நடைபெற்ற மரம் நடும் விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், சங்கத்தின் முகாமையாளர் த.கவீந்திரதாஸ் மற்றும் நெறியாளர் குழுவின் தலைவர் க. பேரின்பநாயகம் மற்றும் நெறியாளர் குழுவின் உறுப்பினர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (11)




யாழ். நகர்மைய றோட்டரக்ட் கழகமும் சுன்னாகம் றோட்டரக்ட் கழகமும் இணைந்து சுன்னாகம் முத்தமிழ் மன்ற முன்பள்ளிக்கு ஒரு தொகுதி தளபாடங்களையும், கற்றல் உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்திருந்தன.

இதன்போது சுன்னாகம் முத்தமிழ் மன்ற முன்பள்ளி போசகர் தளபாடங்களை முன்பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் கையளிக்கிறார்.



உரும்பிராய் வடக்கு இருளன் கிராமத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பொதுநோக்கு மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் பொதுமண்டபத்துக்கான அடிக்கல்லை நடுவதையும் இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக்கிளை முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார், மீள் எழுச்சித்திட்ட அலுவலர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரையும் இங்கு காணலாம். (160)



விடிவெள்ளி கொத்தணியின் 6 ஆம் ஆண்டு நிறைவுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது கே. என். எச். நிறுவனத்தின் மகளிர் சங்க உதவி இணைப்பாளர் அருட்தந்தை யூட் சுதர்சன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் கே.என். எச் நிறுவன உந்துவிப்பாளர் திருமதி சத்தியநாதன் சரோஜினி மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும், விடிவெள்ளிக் கொத்தணியின் தலைவி திருமதி மகாலிங்கம் மனோரஞ்சித மலர் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (224)



கைதடி நவீல்ட் பாடசாலை ஆசிரியர்களான திரு. திருமதி திருக்கோணேஸ்வரன் தம்பதியினர் தாம் திருமணம் செய்து கொண்டதன் ஞாபகார்த்தமாக பாடசாலை வளாகத்தில் மரம் நடுகை செய்தனர்.

- பாடசாலை அதிபர் மற்றும் மாணவர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: நேசன்)




சாவகச்சேரி லயன்ஸ் கழக 32 ஆவது நிர்வாகிகளின் பதவியேற்பு விழா அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்வின் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உப ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ, புதிய தலைவர் லயன் ப. செல்லத்துரை, லயன் வ. சிவராஜராஜேஸ்வரன், லயன் எஸ்.எஸ். தங்கராசா, லயன் க. துரைராஜா, லயன் வ. றீபிரகாஸ், லயன் ச. ஜெயபாலன் ஆகியோர் அமர்ந்திருப்பதைக் காணலாம்.



இணுவில் சமுர்த்தி வங்கிச்சங்க பயனாளிகளுக்கான வாழ்வாதாரக் கடன [illegible] நிகழ்வு இணுவில் சமுர்த்தி வங்கிச்சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்டது. இதில் 3 [illegible] வாழ்வாதாரக் கடனை உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் வழங்கினார். பயனாளி ஒருவருக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய நிகழ்வுகளில்

யாழ். கொய்யாத்தோட்டம், புதுவீதியில் அமைந்துள்ள ஸ்ரீஞான செல்வவிநாயகர் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சாந்திகளும்,மறுநாள் செவ்வாய்கிழமை மாலை 5மணிக்கு கலாதர்ஷணம், கும்பபூசைகள் என்பனவும் நடைபெறும். இந்த கிரியைகள் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (204)

* * *

கோப்பாய், இருபாலையில் அமைந்துள்ள கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விரத நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடுகள் இடம்பெறும். (204)

## ௨ ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு: 24.12.1945

இறப்பு: 13.09.2007

திருமதி

### மகாலிங்கம் இராஜேஸ்வரி

திதி: துதியை (22.08.2009)

எம்மைப் பெற்றெடுத்த தெய்வமே!
எம்மை யெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு தனியாகச் சென்று
ஈராண்டுகள் ஆகியும் ஆறவில்லை
எம் துயர் தாயே!
உம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உம் நினைவுடன்:
மா.மகாலிங்கம் குடும்பத்தினர்.

நவாலி தெற்கு
மானிப்பாய்.

(88102)

கடந்த 21.08.2009 உதயன் நாளிதழில் வெளியான விசேட புலமைப்பரிசில் பரீட்சை வெளியீடு 09 இன் விடைகள்

### வினாத்தாள்-I

01 - 2, 02 - 2, 03 - 1 , 4 - 3, 05 - 2, 06 - 3, 07 - 1, 08 - 2, 09 - 3, 10 - 2, 11 - 3, 2 - 2, 13 - 1, 14 - 3, 15 - 3, 16 - 2, 17 - 1, 18 - 3, 19 - 2, 20 - 2, 21 - 1, 22 - 1, 23 - 2, 24 - 2, 25 - 1, 26 - 3, 27 - 1, 28 - 2, 29 - 2, 30 - 1, 31 - 2, 32 - 1, 33 - 2, 34 - 4, 35 - 1, 36 - 3, 37 - 1, 38 - 2, 39 - 1, 40 - தவறு

### வினாத்தாள்-II

01 - உலக நாடுகள், 02 - அலங்கோலம், 03 - கொத்தன், 04 - கருத்துள்ள விடை, 05 - தொழிலாளி, 06 - சம்பளம், 07 - நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, 08 - அவசியமானது, 09 - Tea, 10 - Advertisement,
11 - Drinks, 12 - Television, 13 - தை, ண, ல, ழை, 14 - சிங்கம், 15 - Lion, 16 - அருணா பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தாள், 17 - தீபனா முயற்சியுடன் பாடங்களைப் படிக்கும் பிள்ளை ஆவாள், 18 - நாங்கள் நல்ல சிறுவர்கள், 19 - Happy Birthday to You, 20 - நான் பாடசாலைக்குப் போகின்றேன், 21 - $4cm^2$, 22 - 2, 23 - 4, 24 - 3, 25 - 1, 26 - 3, 27 - 3, 28 - 3, 29 - புல்லாங்குழல், 30 - சவள் - மண்கிளி, 31 - சாந்தகப்பை, 32 - அரிவாள், 33 - வெள்ளை, 34 - மஞ்சள்,
35 - 40, 36 - 6, 37 - 160kg, 38 - கயனி, வருணா, 39 - 235kg, 40 - கருத்துடைய வாக்கியங்கள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### அப்புத்துரை வயிரமுத்து

திதி:திருதியை (22.08.2009)

தோற்றம்: 19.10.1921

மறைவு: 02.09.2008


தரணியிலே அவதரித்த எம் குல தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
காலன் அவன் கவர்ந்தாலும்
காலமெல்லாம் வாழ்ந்திடும்
வரைந்து வைத்த ஓவியமே!
வாழ்ந்திடுவீர் எம்முடன் என்றும்....

நினைவுகளுடன்:
மனைவி, மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

மாசிவன்,
நீர்வேலி.

(88105)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் விநாசித்தம்பி

(ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி)

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் விநாசித்தம்பி 20.08.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லாச்சி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற வீரவாகு மற்றும் பொன்னாச்சி தம்பதியரின் மருமகனும் ரஞ்சினிதேவியின் அன்புக் கணவரும் யசோதரா (திருகோணமலை), கலைவாணி (அமெரிக்கா), வசீகரன் (சுவிஸ்), திவாகரன் (இந்தியா), பிரபாகரன் (ஜேர்மனி), அனுசியா (ஜேர்மனி), நளாயினி (கனடா) ஆகியோரின் தந்தையும் தில்லைநாதன் (கொழும்பு), செல்லம்மா (கனடா), இரத்தினராசா (நுணாவில்), சிவராசா (கந்தர்மடம்), திருநாவுக்கரசு (புலோலி), வசந்தாதேவி (வவுனியா) ஆகியோரின் சகோதரரும் கதிர்காமபாலன், திருச்செல்வம், சிவக்குமார், உதயக்குமார், சிவசாந்தினி, கலைவாணி, மயூரதி ஆகியோரின் அன்பு மாமனும் கனோஜன், குலபாலினி, ரகுராம், சிவாந்தினி, கீர்த்தனன், கார்த்திகன், கஜானன், காவியன், கிருத்திகா, தனுசிகா, அட்சயா, தீபிகா, லாவண்யா, தனுஷ்யந்தன், சௌமியா, அஷ்வினி, பிரீத்தி, பிரியந் ஆகியோரின் பேரனும் லக்ஷிகாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.08.2009) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரஞ்சினிதேவி (மனைவி),
பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

(88104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் சக்தியாக விளங்கி உலக மாந்தர்களை வாழ்விக்கும் துர்க்கை

நமது நாட்டின் புராதன சக்தி வழிபாட்டுத் திருத்தலங்களுள் ஸ்ரீ துர்க்கா தேவியை மூலமூர்த்தமாகக்கொண்டு தனியான ஆலயமாக அமைந்துள்ள தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. தெல்லிப்பழையில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்து தன்னை நாடி வரும் அடியார்கள் குறைபோக்கியருளும் துர்க்கை அம்மனின் கொடியேற்றம் பூர்வபட்சமும் உத்தர நட்சத்திரமும் கூடிய இன்றைய நன்நாளில் முற்பகல் 11மணியளவில் இடம் பெறவுள்ளது. தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ள பெருந்திருவிழா வரிசையில் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமையன்று அம்பாள் திருத்தேரில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். அடுத்த நாள் செப்ரெம்பர் இரண்டாம் திகதி புதன்கிழமையன்று அம்பாள் தேவஸ்தானத்திலுள்ள துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடி அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

இயற்கை அன்னையாய், உலகத்து மாந்தர்களுக்கும் ஜீவராசிகளுக்கும் அபயம் கொடுத்தருளும் கோலத்தில், துஷ்ட நிக்கிரகம் செய்து, சிஷ்ட பரிபாலனமும் செய்பவள் துர்க்கை. அழித்தல் சக்தி முழுவதும் துர்க்கை மூர்த்தத்திலேயே அமைந்துள்ளது. அழித்தல் என்பது சங்காரம் என்றும் சொல்லப்படும். சர்வசங்கார காரணனாய் திகழ்பவர் சிவபெருமான். அவர் இடப்புறம் அமர்ந்திருந்து சர்வசங்கார காரணியாய்த் திகழும் பராசக்தியே துர்க்காதேவி ஆவாள். சர்வ ஆற்றலுக்கும் சர்வ கருணைக்கும் அவளே இருப்பிடமாவாள். இறைவனது சக்தி துர்க்கா உருவமெடுத்து உலகத்து மாந்தர்களையும் ஜீவராசிகளையும் வாழ்விக்கின்றது.

இந்த வகையில் துர்க்காதேவி ஆலயத்தில் ஆண்டுதோறும் நிகழும் மகோற்சவம் அல்லது பெருந்திருவிழா இறைவனின் பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பதாகவும் அமையும். அப்பஞ்சகிருத்தியங்கள் மகோற்சவ காலத்தில் நடைபெறும் கொடியேற்றம் தொடக்கம் தீர்த்த உற்சவம் வரையிலான கிரியைகளால் உணர்த்தப்படும்.

தெல்லிப்பழை துர்க்காதேவி திருத்தலத்தின் தோற்றம் பற்றிய சர்ண பரம்பரைக் கதைகள் மூலம் இதன் பூர்வீக வரலாறு அறியப்படுகிறது.

தெல்லிப்பழைக் கிராமத்தைச் சேர்ந்த பெரியார் ஒருவர் இந்தியாவுக்குத் தல யாத்திரை சென்று காசியில் பலகாலம் தங்கியிருந்தார். அங்கிருந்த சமயம் அவர் துர்க்கா உபாசகராக மாறி, ஊருக்குத் திரும்பி வந்த சமயம் தம்முடன் துர்க்கா இயந்திரம், திருமுகக் கெண்டி என்பவற்றையும் எடுத்து வந்தார். அவற்றை தெல்லிப்பழையில் உழுகுடைப்பதி என்ற வளவில் ஒரு மரத்தடியில் கொட்டில் ஒன்றை அமைத்து அதில் அவற்றை ஸ்தாபித்துப் பூசித்து வந்த அத் திருத்தலமே நாளுக்கு நாள் வளர்ச்சி கண்டு இன்று இலங்கையின் வட பகுதியில் புகழ்பெற்ற துர்க்கை அம்பாள் ஆலயமாகப் பிரசித்தி பெற்றுத் திகழ்கிறது.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற முருகன் திருத்தலங்களில் ஒன்றான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுடன் துர்க்கை அம்மன் ஆலயத்துக்குப் பண்டைய தொடர்பு இருந்து வந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் திருப்பணிகள் நிறைவுற்று 1815 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் இடம் பெற்றதாகவும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் துர்க்கா தேவி ஆலயத் திருப்பணி நடைபெற்று 1820 ஆம் ஆண்டில் துர்க்கை அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றதாகவும் ஏட்டுச் சுவடிகளிலிருந்து அறிய முடிந்திருக்கிறது.



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழா இன்று (22.08.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அதனையொட்டி இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.

துர்க்காதேவிதேவஸ்தானம் ஆரம்பம் முதலே தனிப்பட்ட முகாமையாளர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1948ஆம் ஆண்டில் இவ் ஆலயத்தின் முகாமையாளராக இருந்த கதிரேசு நாகநாதன் என்பவர் துர்க்கை அம்பாளின் அடிய்வர்களின் அடியார்களின் விருப்புக்கு இணங்கி துர்க்கை அம்பாளின் தீவிர பக்தர்களான பெரியார்களைக் கொண்ட தர்மகர்த்தா சபையொன்றை உருவாக்கி அச்சபையிடம் தேவஸ்தானப் பொறுப்பை ஒப்படைத்தார். துர்க்கை அம்பாளின் அடியார்கள் மற்றும் தர்மகர்த்தா சபை மற்றும் திருப்பணிச்சபை என்பவற்றின் பெருமுயற்சியில் அம்பாள் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1965 ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. அன்று முதல் நித்திய, நைமித்தியங்களும் கிரமமாக நடைபெற்று ஆண்டு தோறும் அலங்காரத் திருவிழாவும் இடம் பெற்று வந்தது.

துர்க்கை அம்பாளுக்கு மகோற்சவம் நடத்த அம்பாள் அடியார்கள் விரும்பியதால் 1968 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் திருவோண நட்சத்திர நாளன்று தீர்த்த உற்சவத்துடன் மகோற்சவம் நிறைவெய்தும் விதத்தில் மகோற்சவம் ஆரம்பிக்கப் பட்டது.

தேவஸ்தானத்தை முறைப்படி நிர்வகிக்கவென உள்ளூர் பெரியார்களை உள்ளடக்கிய நிர்வாக சபையொன்று தர்மகர்த்தா சபையால் 1966 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. முதன் முதலில் இவ்விதம் உருவாக்கப்பட்ட ஆலய நிர்வாக சபையின் பொருளாளராகப் பொறுப்பேற்றவர் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார். பத்து ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக அவர் அப் பதவியை வகித்து வந்த வேளையிலே தேவஸ்தானத்தின் திருப்பணிகள், மகோற்சவங்கள் சிறப்புற நடைபெற்றன. தாம் நிர்வாக சபையின் பொரு

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று முற்பகல் கொடியேற்றம்

ளாளராகப் பதவி வகித்த வேளையில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்குச் சென்று தமது சமயச் சொற்பொழிவுகள் மூலம் துர்க்கா துரந்தரி, துர்க்கை அம்பாளின் பெருமையை சைவ மக்கள் மத்தியில் பரப்பினார். உள்ளூர், வெளியூர் பக்தர்களின் பேருதவி காரணமாக இக்கால கட்டத்தில் தேவஸ்தானத்தின் திருப்பணிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் துரிதமாக நிறைவேறின. 1977ஆம் ஆண்டில் தேவஸ்தான நிர்வாக சபையின் தலைவராக துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பொறுப் பேற்ற வேளை முதல் அவர் அண்மையில் இறைவனடி சேர்ந்த வேளை வரை துர்க்கை அம்மன் ஆலயத்தின் பொற்காலம் எனக் கூறினால் அது தவறாகாது. அவர் தேவஸ்தான நிர் வாக சபையின் தலைவராகப் பணியாற்றிய காலகட்டத்தில் தேவஸ்தான முன் வாசல் இராஜகோபுரம், தீர்த்தத் திருக்கேணி என்பன நிர்மாணிக்கப்பட்டு துர்க்கை அம்பாள் ஆலயம் புதுப்பொலிவு பெற்றது. நாளுக்கு நாள் துர்க்கை அம்பாளின் புகழ் உள்ளூரில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் பரவி அம்பாள் மீது பக்தி கொண்டு அவள் அருள் வேண்டி அவளது ஆலயத்தை நாடிவரும் பக்தர்களின் எண்ணிக்கையும் உயர்ந்ததன் காரணமாக அவர்களது காணிக்கை மற்றும் அன்பளிப்புக்கள் அம்பாளைப் பெருமளவில் வந்தடைந்தன.

துர்க்கை அம்பாளின் ஆலய நிர்வாகத்தை முறைப்படி சிறப்புடன் நிர்வகித்து வந்ததுடன், மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கு இணங்க, தனது தலைமையிலான ஆலய நிர்வாக சபையின் உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இறைபணிக்கு மேலதிகமாக பொதுப் பணிகள் பலவற்றையும் ஆரம்பித்ததுடன் அவற்றைத் திறம்படவும் நிர்வகித்து வந்தார்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் விதத்தில், திக்கற்ற குழந்தைகளின் புனர்வாழ்வுக்கென துர்க்கை அம்மனின் ஆலய நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்பட்டு இற்றை வரை சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வரும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் துர்க்கை அம்மனின் புகழை உலகெங்கும் எடுத்துப்பறை சாற்றி வருகிறது. அது மட்டுமல்லாது துர்க்கை அம்மனின் பெயரால் ஆலய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பொதுப் பணிகள் பண்டைக்காலத்தில் ஆலயங்கள் சமூகத்துடன் எத்துணை நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருந்தன என்பதற்கு இன்று எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இத்துணை பெருமைவாய்ந்த தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வீற்றிருந்து தன் அடியார்களுக்கு நல்லருள் பாலித்து வரும் ஸ்ரீ துர்க்கை அம்பாள் இன்று கொடியேற்றம் காண்கிறாள். அம்பாளை மனம், வாக்கு, காயத்தால் தொழுதேத்தி அம்பாளின் அனுக்கிரகம் பெற்றுய் வோமாக.

— சதரா —

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் தாக்குதல் சம்பவம்:

# முன்னாள் குற்றத்தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் வாஸ் குணவர்த்தனவின் மனைவி சரண்

### 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஓக. 22

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு முன்னாள் பணிப்பாளர் வாஸ்குணவர்த்தனவின் மனைவி சார்மலி பிரியதர்ஷனி பெரேராவை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடுவெல நீதிவான் மணிலால் டி சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இலங்கைத் தகவல் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் நிபுண ரட்ணாயக்க மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கில் வாஸ் குணவர்த்தனவின் மனைவியும் ஒரு சந்தேக நபர் ஆவார்.

இவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார். ஆயினும் இவர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் இவர் தமது சட்டத்தரணி ஊடாக நேற்று முன்தினம் காலை கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் சரணடைந்தார். கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் இவரை இலங்கைத் தகவல் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் நிபுண ரட்ணாயக்கா கடத்தப்பட்டு தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரித்தனர். அதன் பின்னர் இவரை கடுவெல நீதிவான் நீதிமன்றில் ஆஜராக்கினர்.

நீதிமன்றம் இவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்தனவின் மகன் நரவிந்து குணவர்தனவே இவ்வழக்கின் பிரதான சந்தேக நபர் ஆவார். கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த 12 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வழக்கின் ஏனைய சந்தேகநபர்களாவர்.

இலங்கைத் தகவல் தொழில்நுட்பக் கல்லூரியில் தம்முடன் பயிலும் சக மாணவனான நிபுண்ரட்ணாயக்கவுடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மகனுக்கு விரோதம் ஏற்பட்டது.

ரவிந்து குணவர்த்தன் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுப் பணிப்பாளராக இருந்த தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி கொழும்புக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சகிதம் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவுக்குச் சொந்தமான வாகனத்தில் சென்று நிபுண் ரட்ணாயக்கவைக் கடத்தி தமது வீட்டுக்குக் கொண்டுவந்து தாக்குதல் நடத்தி சித்திர்வதை செய்திருக்கிறார். இச்சம்பவத்தில் வாஸ் குணவர்த்தனவின் மனைவியும் சம்பந்தப்பட்டிருக்கிறாரென சம்பவத்தை விசாரித்துவரும் கொழும்புக் குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் தாக்குதலுக்கு உள்ளான நிபுண் ரட்ணாயக்க இத்தாக்குதல் சம்பவத்தில் வாஸ் குணவர்த்தனவின் மனைவி சம்பந்தப்பட்டிருக்கிறார் எனவும் தம்மை அசிங்[illegible]களால் திட்டியிருக்கிறார் எனவும் கூறியிருக்கிறார்.

(அ-சி)

## பொலிஸ் பேச்சாளராக நிமால் மெதிவகே

புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவகே நியமிக்கப்பட்டுள்ளார் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

வடமேல் மாகாண மற்றும் மேல்மாகாணத்துக்கான பொறுப்பதிகாரியாக நிமால் மெதிவகே பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர இவ்வருட இறுதியுடன் ஓய்வுபெறவிருந்த நிலையிலேயே அவரின் இடத்துக்கு மெதிவகே நியமிக்கப்பட்டுள்ளார்.

(சி)

## நீர்வேலியில் கோப்சிற்றி

கோப்பாய்,ஓக.22

வலி.கிழக்கு நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கூட்டுறவு நகர் (கோப்சிற்றி) நீர்வேலி குறுக்கு வீதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே இப் பலநோக்குக் கூட்டுவுச் சங்கத்தின் கூட்டுறவுநகர்க் கிளைகள் உரும்பிராய், ஊரெழு, இருபாலை ஆகிய பகுதிகளில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

50-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [illegible]க்கு முன் அகதிகளை விடுவிக்க மீண்டும் வலியுறுத்துகின்றது அமெரிக்கா

## நிலைமை மிகவும் மோசமடையலாம் எனத் தெரிவித்திருக்கிறார் உதவி ஆணையாளர்

வோஷிங்டன், ஓக. 22

இலங்கையில் பருவப்பெயர்ச்சி மழை காலம் ஆரம்பமாவதால் இடம்பெயர்ந்த மக்களை முகாம்களிலிருந்து விடுவிப்பது மிக முக்கியமானது என அமெரிக்கா மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்காவின் அகதிகள் சனத்தொகை மற்றும் புலம்பெயர்விற்கான உதவி வெளிவிவகார அமைச்சர் எரிக் ஸ்வார்ட்ஸ் இலங்கை நிலைவரம் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையில் இடம்பெயர்ந்த மக்கள் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்து இருவேறு கருத்துகள் இல்லை. சமீபத்தைய மற்றும் எதிர்கால மழை குறித்து சிந்திக்கும்போது இவ்வாறு பலவந்தமாகத் தடுத்து வைக்கப்படுதல் எமக்கு கவலையளிக்கின்றது" எனக் குறிப்பிட்டுள்ள அவர், இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

5 கோடி டொலர்வரை நாம் இலங்கைக்கு மனிதாபிமான உதவி செய்துள்ளோம். இலங்கைக்கு கடந்த மாதம் நான் விஜயம் மேற்கொண்டிருந்தேன்.

அங்கு மிகவும் நெருக்கடியான நிலை காணப்படுகின்றது. எனது விஜயத்தின் போது 2 லட்சத்து 80 ஆயிரம் மக்கள் முகாம்களில் இருந்தனர். அதிகளவானவர்கள் நாங்கள் விஜயம் மேற்கொண்ட மெனிக் பார்மில் இருக்கின்றனர். எனது விஜயத்தின் பின்னர் ஓகஸ்ட் மாதத்தில் சுமார் 75 ஆயிரம் பேர் வரை முகாமிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என அரசு எமக்குத் தெரிவித்துள்ளது.

இது உற்சாகமளிக்கக்கூடிய செய்தி. என்றாலும் நடமாட்ட சுதந்திரம் என்ற அடிப்படைக் கொள்கை இலங்கையில் கேள்விக்குறியாகியுள்ளது.

### இடம்பெயர்ந்தவர்களே எங்கு செல்லவேண்டும் என்று முடிவு எடுக்க வேண்டும்

உலகின் சகல பகுதிகளிலும் இடம்பெயர்ந்தவர்களே தமது பகுதிக்குத் திரும்புவது குறித்த முடிவை எடுக்கின்றனர்.

தமது நலனை அடிப்படையாக வைத்து இது குறித்த முடிவை எடுப்பதில் மக்களே பொருத்தமானவர்களாக இருப்பதை நாம் கண்டுள்ளோம்.

இலங்கையில் மக்கள் தமது சுயவிருப்பத்துக்கு மாறாகப் பலாத்காரமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகவுள்ளது.

குறிப்பாக சமீபத்தைய மழையும் எதிர்கால பருவப்பெயர்ச்சி மழை காலமும் எமக்கு அதிக கவலையை அளிக்கின்றன. இதன் காரணமாக மக்களை விடுவிக்க வேண்டியமை அதிகளவு முக்கியமானதாகின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் சுய விருப்பத்திற்கு மாறாக பலாத்காரமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதில் இருவேறு நிலைப்பாடோ, சந்தேகமோ இல்லை. பலாத்காரமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதற்கு வேறு என்ன அர்த்தம் என்பது எனக்குத் தெரியாது. இதையே இலங்கையில் தெரிவித்தேன்.

வவுனியாவிலே உள்ள பெரிய முகாமுக்கு நான் விஜயம் மேற்கொண்டிருந்தேன். அது மிகப் பெரிய முகாம். உலகில் ஏனைய பகுதிகளில் காணப்படும் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம் போன்று அது காணப்பட்டது.

### மக்கள் முகாம்களில் வசிக்க விரும்பவில்லை

இடம்பெயர்ந்தவர்களின் வாழ்க்கையை முடிந்தளவிற்கு வாழக்கூடியதாக செய்வதற்கு முகாம் நிர்வாகிகளும், அரச சார்பற்ற அமைப்புகளும் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட அனைத்தையும் செய்கின்றனர்.

என்றாலும், எவரும் அங்கு வசிக்க விரும்பவில்லை.

மேலும் நான் பல விடயங்களை அங்கு இனம் கண்டுள்ளேன். இவற்றை நடைமுறைப்படுத்தினால் முகாமில் நிலைமைகள் மேலும் முன்னேற்றமடையலாம்.

சில சர்வதேச அமைப்புகள் மகத்தான சேவையை வழங்குகின்றன என நான் கருதுகிறேன்.

உதவி மற்றும் பாதுகாப்பை வழங்கும் சர்வதேச அமைப்புகள் முகாம்களுக்கு செல்வதற்கான வாய்ப்புகள் இலகுவானதாக இருக்கவேண்டும் என நான் கருதுகிறேன்.

அரசு முகாமுக்குள் வெளியார்கள் செல்வதை இலகுவாக்க வேண்டும்.

இலங்கையில் எனது சந்திப்புகளின் போது இதனை மிகத் தெளிவாக எடுத்துரைத்தேன்.

முகாம்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் அங்கு போஷாக்கின்மை அதிகமாக உள்ளமை தெரியவந்துள்ளது - என்றார். (அ-சி)

## ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் 'வணக்கம் யாழ்ப்பாணம்' நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் 'வணக்கம் யாழ்ப் பாணம்' என்ற தலைப்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இம்மாதம் 17ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதி வரை நடைபெறுகின்றன.

இன்று 22 ஆம் திகதி விவசாயிகள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் நிறைவேற்று அலுவலர் எம். தியாகரன் தலைமையில் நடைபெறும். 23 ஆம் திகதி கடற்றொழிலாளர் விழிப்புணர்வு கருத்தரங்கு இன்பருட்டி சனசமூக நிலை மண்டபத்தில் நடைபெறும். ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடி முகாமையாளர் கே. ஸ்கந்தபாபு தலைமை வகிப்பார். 'பத்தும் விமன்' யாழ்ப்பாணத்துக்கான சீட்டிழுப்பும் இடம்பெறும்.

26ஆம் திகதி ஹட்டன் தேசியவங்கியின் பருத்தித்துறை கிளை திறப்புவிழா இடம்பெறும் அன்றைய தினம் நுண்நிதி கருத்தரங்கு யாழ். செயலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


**மருத்துவப் பட்டப் படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு!**

ரஷ்ய நாட்டில் மருத்துவப் பட்டப் படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல் ரஷ்யாவில் கல்வி பயிலுகின்ற மருத்துவ பீட மாணவர்களினால் வழங்கப்படுகின்றது.

தொடர்பு: 0771028756
E Mail- Sentgolanka @ yahoo.com.
K.Gobikirshnan (medical studient in BSMU)

**விற்பனைக்கு**

நிசான் பிக்அப் 53-XXXX
விற்பனைக்குண்டு.
விலை 850 000 ரூபா
தொடர்பு: 0777570124

**பிரத்தியேக வகுப்பு**

உயிரியல் பிரத்தியேக வகுப்புகள்
கொடுக்கப்படும்.
தொடர்பு: 0774012800


## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்திய உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஓக.22

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்பட்ட தரம் - 13 (2009) உயிரியல், கணித, வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான பரீட்சையில் புள்ளி அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் 25 மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**கணிதப்பிரிவு**

ஏ. ஜோன்நிராஜ் (ஹாட்லி கல்லூரி), எஸ். பிரசாந், (ஹாட்லி கல்லூரி), ரி. ஜெயந்தன் (ஹாட்லி கல்லூரி), எஸ். தமயந்தி (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். எழில்வேல் (யாழ் இந்துக்கல்லூரி), எஸ். தனஞ்ஜெயன் (ஹாட்லிக் கல்லூரி), ஆர். செந்தூரன் (ஹாட்லிக் கல்லூரி), சி. சஞ்ஜே (உடுப்பிட்டி அ.மி கல்லூரி), எஸ். கோகுல் (ஹாட்லிக் கல்லூரி), ஜே. லடிஸ் லோஸ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஜி. தர்சன் (ஹாட்லிக் கல்லூரி), வி. அன்ரன்சகாயராஜா (ஹாட்லிக் கல்லூரி), ஏ. கஜந்தன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), சி. தனுஜா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். கீதன் (ஹாட்லிக் கல்லூரி), பி. பிருந்தன் (யாழ். இந்துக்கல்லூரி), எஸ். நரேஸ்குமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜே. பிரகதீஸ் (ஹாட்லிக் கல்லூரி), ரி. திவ்யராஜ் (ஹாட்லி கல்லூரி), ஏ. கோபிநாத் (யாழ். இந்துக் கல்லூரி), எல். தக்ஷாயினி (வேம்படி மகளிர் கல்லூரி), ஏ. ஆன் சிந்துஜா (வேம்படி மகளிர் கல்லூரி), வு. சாந்திக்கா (யாழ் நெல்லியடி ம.வி), என். சபேசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**உயிரியல் பிரிவு**

ஏ.எஸ்.பிரதாந் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.இரகுவரன் (நெல்லியடி ம..ம.வி), பி.பிரகாஸ் (யாழ்.விக்ரோறியாக் கல்லூரி), கே.லாவண்யா (யாழ்ப்பாணக் கல்லூரி), கே.சரண்யா (வேம்படி மகளிர் கல்லூரி), பி.சுவர்ணா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.யதுகுலன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜே.ஜோன் செல்ரன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), கே.உமாசுதன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.அபிராமி (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை பருத்தித்துறை), பி.கார்த்தீபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), வி.சயந்தா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜே.ஜனனி (வேம்படி மகளிர் கல்லூரி), ஜே.ஞானசேகர் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜி.பவீத்திரா (வேம்படி மகளிர் கல்லூரி), வி.சிந்துஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.சங்கர் (ஹாட்லிக் கல்லூரி), ரி.லக் ஷிகா (வேம்படி மகளிர் கல்லூரி), ஆர். கபில்நிஷாந் (யாழ். இந்துக் கல்லூரி), பி.பிரியா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), எம்.விதுஷாயினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜி.சுதர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜே.மேரிசில்வியா (யாழ்ப்பாணக் கல்லூரி), வி.உஷாந்தினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே.மைத்ரேயி (வேம்படி மகளிர் கல்லூரி).

**வர்த்தகப்பிரிவு**

சக்திநாயகி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.வாகினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ரி.சோபிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஆர்.நிதர்சன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), என்.லக்சனா (யூனியன் கல்லூரி), பி.ஷியாமா (வேம்படி மகளிர் கல்லூரி), ஆர்.வருணன் (ஹாட்லிக் கல்லூரி), ஈ.ஐஸ்வர்யா (வேம்படி மகளிர் கல்லூரி), ரி.விஷ்வராஜ் (விக்ரோரியாக் கல்லூரி), பி.சோபிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஜே.லேகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), எஸ்.தனுஷா (கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.அர்ச்சனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வி.பிரியங்கா (வட.மத்திய மகளிர் கல்லூரி), எஸ்.சபினா (கனகரத்தினம் ம.ம.வி.), எஸ்.தனுஜா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி. காரைநகர்), எஸ்.சிவகாமி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஏ.அன்ரனிஜோன்சன் (ஹாட்லிக் கல்லூரி), கே.அனுஷிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ். தேவகி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), எஸ்.துவாரகா (வடமத்திய மகளிர் கல்லூரி), எஸ்.பிரகணன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.சுபாஜினி (யாழ்.இந்து மகளிர் கல் லூரி), என். கிரித்திகா (யூனியன் கல்லூரி), ரி.கீதாஞ்சன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி). (50)

## வெளிவிவகார அமைச்சின் செயலாளராக ஜயசிங்க

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இலங்கையின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரான ரொமேஷ் ஜயசிங்க நியமிக்கப் பட உள்ளார் என்றுதெரியவருகிறது.

இலங்கை வெளி விவகார அமைச்சின் தற்போதைய செயலாளராகக் கடமையாற்றி வரும் கலாநிதி பாலித கோஹன . ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகச் செல்கின்றார்.

இந்நிலையிலேயே இலங்கை வெளி விவகார அமைச்சின் மூத்த இராஜதந் திரிகளில் ஒருவரான ரொமேஷ் ஜயசிங்க வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளராக கலாநிதி பாலித கோஹனவின் இடத் துக்கு நியமிக்கப்பட உள்ளார் என்றும் தெரிய வருகிறது. இவரின் தந்தை டபிள்யூ .ரி. ஜய சிங்க இலங்கை வெளிவிவகார அமைச்சில் கடமையாற்றிய இலங்கையின் புகழ் பூத்த இராஜதந்திரிகளில் ஒருவராவார். டபிள்யூ. ரி.ஜயசிங்க 1972 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை இலங்கை வெளிவி வகார அமைச்சின் செயலாளரா கக் கடமை யாற்றியிருக்கிறார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

தந்தையைப் போலவே ரொமேஷ் ஜய சிங்கவும் இலங்கையின் புகழ் பூத்த இராஜ தந்திரிகளில் ஒருவராக மிளிர்ந்து வருகின்றார்.

இவர் 1981 ஆம் ஆண்டு இலங்கை வெளி நாட்டு சேவையில் இணைந்துக் கொண்டார்.

இவர் தற்போது இந்தியாவுக்கான இலங் கைத் தூதுவராகப் பணியாற்றுகின்றார்.

சுவிற்சலாந்து, பங்களாதேஷ், பெல் ஜியம் ஆகிய நாடுகளிலும் இலங்கையின் இராஜத்ந்திரியாக கடந்த காலங்களில் கடமையாற்றியுள்ளார். (97)


**S&M Consultant Service, Branch Office**

*148, Temple Road, Jaffna.* (யுனிசெவ் முன்பாக)

யாழ்.மாணவர்களுக்கு லண்டனில் *Student Visa* பெற்றுக்கொடுப்பதில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்!!!

தற்பொழுது தளர்த்தப்பட்டுள்ள சலுகைகளைப் பயன்படுத்தி ஒக்ரோபர் கற்கை நெறிகளுக்கு முந்துங்கள்

எமது முயற்சி நூற்றுக்கு நூறுவீதம் வெற்றி பெறுவதற்குரிய காரணங்களும் சிறப்பம்சங்களும்

- ★ அடிப்படைத் தகைமைகள் இல்லாத மாணவர்களை உள்வாங்குவதில்லை
- ★ மாணவர்களின் தகைமைக்கேற்ப கற்கை நெறிகளைத் தெரிவுசெய்தல்
- ★ வங்கி வைப்புப்பற்றிய தெளிவான விளக்கமளித்தலும் இலகுவான வழிமுறைகளுக்குரிய ஆலோசனையும் வழங்கல்
- ★ கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குரிய பயிற்சி நெறிக் கட்டணங்களைச் செலுத்துவதில் இலகு நடைமுறை வழிகாட்டலும் வங்கிகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பணமுறியை (Draft) கல்லூரிகளின் பெயர்களுக்குப் பெற்றுக்கொடுக்க மாணவர்களுக்கு வழிகாட்டல்.
- ★ தங்குமிட சான்றிதழ்களைச் (Accomadation letter) சம்பந்தப்பட்ட கல்லூரிகளில் இருந்து பெற்றுக்கொடுத்தல்
- ★ மாணவர்களின் உறவினர்கள் லண்டனில் இருப்பின் அவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களுக்கு அண்மையாகக் கல்லூரி அனுமதி பெற்றுக்கொடுத்தலும் கல்லூரி அனுமதிக் கட்டணம், பணவைப்புச் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கி விண்ணப்பிக்கும் மாணவர்களின் பழுவைக் குறைத்தல்
- ★ எமது ஆலோசனைக் கட்டணம் தவிர்ந்த எந்தவொரு பணத்தையும் கையாடல் செய்வதில்லை.
- ★ வங்கிகளில் பணவைப்பு ஒழுங்குபடுத்தல், போலிக் கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற எந்தவொரு முறைகேடான அலுவல்களையும் எமது நிறுவனம் மேற்கொள்வதில்லை.
- ★ விசா விண்ணப்பப்படிவங்கள் வெகு கவனமாக மாணவர்கள் முன்னிலையில் எம்மால் பூரணப்படுத்தப்பட்டு உரிய ஆவணங்கள் யாவும் இணைக்கப்பட்டு மிகுந்த கவனத்துடன் பராமரிப்புடனும் எமது நேரடிக் கண்காணிப்பில் மாணவர்கள் மூலம் தூதுவராலயத்தில் கையளிக்கப்படுதல்
- ★ 3 நாள்களில் Offer letter எடுத்துக் கொடுக்கப்பட்டு வீண் காலதாமதம் தவிர்க்கப்படுதல்
- ★ தற்பொழுது தளர்த்தப்பட்டுள்ள பணவைப்பு முறையைப் பயன்படுத்தி விசா விண்ணப்பங்களை துரிதகதியில் சகல ஒழுங்குகளுடன் தயார்ப்படுத்தி தூதுவராலயத்தில் கையளித்தல் (பணம் வைப்பிலிடப்பட்டு 4 கிழமைகள் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை வைப்பிலிடப்பட்ட மறுநாளே விண்ணப்பங்களைக் கையளிக்க முடியும்-ஒக்ரோபர் முதலாம் திகதி வரை மட்டுமே இச்சலுகை)

***Student Visa* வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்குரிய அடிப்படைத் தகைமைகள்**

I. கா.பொ.த. சாதாரணப் பரீட்சையில் குறைந்த பட்சம் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருப்பதுடன் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவேண்டும். (ஆங்கிலத்தில் சாதாரண சித்தி இல்லாத மாணவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) ஆங்கில பாடத்தில் பிறிதொரு தடைவை சித்தி பெற்றிருந் தாலும் ஏற்றுக்கொள்ளப்படும். லண்டன் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கு இந்த அடிப்படைத் தகைமை போதுமானது.

II. வேறு மேலதிக கல்வித் தகைமை பெற்றிருப்பின் அக்கற்கைகள் சம்பந்தமான துறைகளில் மாணவர்கள் அனுமதிபெற வழிகாட்டப்படும்.

III. பட்டதாரி மாணவர்கள் முதுமாணி (Master Degree) கற்கை நெறிகளுக்கு அனுமதி பெறலாம்.

IV. விவாகமானவர்களும் Student Visa வுக்கு விண்ணப்பிக்கலாம். தனியாகவும் செல்லலாம். குடும்பத்துடன் செல்வதாயின் அதற்குரிய பணவைப்புச் செய்து விசா பெற்றுக் கொள்ளலாம். இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இன்றே முயற்சியில் இறங்கி ஒக்ரோபர் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற்று லண்டன் செல்லுங்கள்

பட்டப்படிப்பு (Degree) முதுமாணி பட்டப்படிப்பு லண்டனில் முடிப்பவர்களுக்கு லண்டனில் முழுநேரவேலை அனுமதி. உங்களுக்கு ஆலோசனைகளும் சேவையும் வழங்க எந்நேரமும் ஆயத்தமாக உள்ளோம்.

(88020)

எந்நேரமும் தொடர்பு: Mobile 0774528818
*Tel: 021 222 3818, E.Mail: mg1404_2009@ yahoo.com*
148, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (யுனிசெவ் முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி இலக்கு 413; தொடுமா நியூஸி..?

## கால நிலையால் நேற்றைய ஆட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக. 22

காலி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுவரும் இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூ ஸிலாந்து அணிக்கு வெற்றிபெறுவதற்கு இன்னும் 383 ஓட்டங்கள் தேவைப் படுகின்றன.

நியூஸிலாந்து அணி தனது முதலாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களை எடுத்திருந்தபோது 3ஆம் நாள் ஆட்டம் முடிவடைந்திருந்தது.

இந்நிலையில் நேற்று நான்காம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த நியூஸில்ாந்து அணி தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 299 ஓட் டங்களை மாத்திரமே பெற்றது.

இதன் அடிப்படையில் இலங்கை அணி 152 ஓட்டங்களால் முன்னிலை வகித்திருந்தது.


இலங்கை அணி தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 452 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

இந்த நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சார்பில், திலகரட்ண டில்ஷான் அதிரடியாக ஆடி சதமடித்துக்கொடுக்க, 259 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவ தாக அறிவித்தது.

திலகரட்ண டில்ஷான் 131 பந்துகளை எதிர்கொண்டு 123 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதில் 12 பௌண்டறிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கும். டில்ஷான் முதலாவது இனிங்ஸில் 94 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இலங்கையின் இரண்டாவது இனிங்ஸில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 46 ஓட்டங்களை எடுத்து 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொள்ள நியூஸிலாந்து அணிக்கு வெற்றியிலக்காக



413 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பிளயின் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

களத்தில் குப்தில் 17 ஓட்டங்களுடனும், ரெய்லர் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

சீரற்ற கால நிலை காரணமாக நேற்றை நான்காம் நாள் ஆட்டம் 45 நிமிடங்களுக்கு முன்னதாக இடைநிறுத்தப்பட்டது.

இன்றைய இறுதி நாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற வேண்டுமாயின் இன்னும் 383 ஓட் டங்களைப் பெற வேண்டியுள்ளது.

இதேவேளை, இலங்கை அணியின் 'சுழல் மன்னன்' முத்தையா முரளிதரன் நியூஸிலாநதுக்கெதிரான போட்டிகளில் மொத்தமாக 100 விக்கெட்டுகளை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. முதலாவது இனிங்ஸில் முரளி, நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் ஓ பிரைனின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் இந்த இலக்கை அடைந்தார். முரளிதரன் முதலாவது இனிங்ஸில் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

## சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

ஜோகனஸ்பார்க், ஓக. 22

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான 15 பேர் கொண்ட தென்னாபிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அணி வீரர்கள் விவரம் வருமாறு:-

ஸ்மித் (அணித்தலைவர்), ஜொகன் போத்தா (துணைத் தலைவர்), ஹசிம் ஆம்லா, மார்க் பௌச்சர், டி வில்லியர்ஸ், டுமினி, கிப்ஸ், கலிஸ், ஆல்பி மார்கல், நிற்னி, வேனே பெர்நெல், ரொபின் பீற்றர்சன், டேல் ஸ்ரைன், சொட்சொபே, வோன் ரர் மேர்வி.

## தொடர்கிறது உசைனின் சாதனைப் பயணம்; 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் அபாரம்!

உலகின் 'மின்னல் மனிதன்' என்று அழைக்கப்படும் ஜமைக்காவின் உசைன் போல்ட் பேர்ளினில் நடைபெற்று வரும் உலக தடகள உலக சம்பியன்ஷிப் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் 19.19 விநாடிகளில் இலக்கை எட்டி மீண்டும் ஒரு புதிய உலக சாதனைப் படைத்துள்ளார்.




ஏற்கனவே பேர்ளினில் 100 மீற்றர் சம்பியன் பட்டத்தை உலக சாதனையுடன் வென்றவர் உசைன்போல்ட்.

இப்பபொழுது, ஓர் ஆண்டிற்கு முன் உசைன் போல்ட் பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் 19.30 விநாடிகள் என்ற இருந்த உலக சாதனையை நிகழ்த்தினார்.

ஆனால், நேற்றுமுன்தினம் மேலும் 11 விநாடிகளைக் குறைத்துவிட்டார் உசைன் போல்ட்.

இவருக்கு அடுத்தபடியாக பனாமா வீரர் அலான்சோ எட்வர்ட், 0.62 விநாடிகளைக் கூடுதலாக எடுத்துக்கொண்டு இலக்கை எட்டி இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அமெரிக்க வீரரான வாலஸ் சிபியர்மன் 3 ஆவது இடம் பிடித்தார்.

ஐ.ஏ.ஏ.எவ். சம்பியனான டைசன் கே காயம் காரணமாக் இப்போட்டியில்பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கர்சாய்க்கு வெற்றிவாய்ப்பு?

## இரு வாரங்களுக்குப் பின்னரே உத்தியோக பூர்வ அறிவிப்பு

காபூல், ஓக. 22

ஆப்கான் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஹமீத் கர்சாயே முன்னணி வகிக்கின்றார். என அவரது தலைமைப் பிரசாரகர் டீன் மொஹம்மத் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார் பூர்வாங்க முடிவின்படி அவரே வெற்றி ஈட்டியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தான் எங்கணும் வியாழக்கிழமை இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, வாக்குச் சாவடிகளில் ஏறத்தாழ, 29,000 கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களின் ஏகோபித்த கருத்துப்படி, கர்சாயே வெற்றிபெற்றவராவார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஹமீத் கர்சாய் தாமே வெற்றி ஈட்டிவிட்டார் என தெரிவித்துள்ளார். இதை அப்துல்லா ஏற்கவில்லை. அவர் தாமே வெற்றிவாகை சூடியுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் சம்பந்தப்பட்ட எத்தகைய பூர்வாங்க முடிவுகளையும் வெளியிட ஆப்கான் தேர்தல் அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள்.

உத்தியோகபூர்வ முடிவுகள் இரு வாரங்களுக்குப் பின்னரே வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, ஜனாதிபதி கர்சாயும், அவரது மேற்கத்தேய அணியினரும் இது வெற்றிகரமான ஒரு தேர்தல் என மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

''தேர்தல் சமயத்தில் 15 மாகாணங்களில் 73 தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும், எத்தகைய தாக்குதல்களாலும் தேர்தலை தடுத்து நிறுத்திவிட முடியவில்லை'' என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சி செய்துவந்த தலிபான்கள் அமெரிக்கத் தாக்குதலுக்குப் பயந்து ஆட்சியைக் கைவிட்டுத் தப்பிஓடினர். இதன் பின்னர் 2 ஆவது முறையாக ஜனாதிபதித் தேர்தல் வியாழக்கிழமை நடந்தது.

இதில் இப்போதைய ஜனாதிபதி கர்சாய் மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து முன்னாள் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா அப்துல்லா உட்பட 36 பேர் போட்டியிட்டனர். இவர்களில் கர்சாய்க்கும் அப்துல்லாவுக்கும் இடையேதான் கடும் போட்டி நிலவியது.

மொத்த வாக்காளர் எண்ணிக்கை ஒரு கோடியே 70 இலட்சம் ஆகும். நாடு முழுவதும் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 6 ஆயிரத்து 969 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. இதில் பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்ததுடன். வாக்களிப்பு மாலை மேலும் ஒரு மணித் தியாலத்துக்கு நீடிக்கப்பட்டது.

இந்தத் தேர்தலை தலிபான் தீவிரவாதிகள் புறக்கணித்தனர். இதனால் அவர்கள் தேர்தல் நடக்கக்கூடாது என்ற எண்ணத்திலும், வாக்காளர்களை அச்சுறுத்தும் நோக்கத்தோடும் வாக்குப்பதிவு தினத்தன்று ரொக்கெட்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினார்கள். பொலிஸாருடனான மோதலில் 22 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அதிக அளவில் வன் முறைச் சம்பவங்கள் நடந்தன என்பதுடன் பாதுகாப்புப் பணியில் அமெரிக்க நேசப்படைகள் உட் பட மொத்தம் 3 இலட்சம் இரா ணுவ வீரர்களும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## ஒபாமாவுக்கு கொலைமிரட்டல்; அமெரிக்க சந்தேகநபர் ஒப்புதல்

வாஷிங்டன், ஓக. 22

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு கொலை மிரட்டல் விடுத்த அமெரிக்கர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். புளோரிடா மாகாணத்தைச் சேர்ந்த நதான் வைன் என்ற 21 வயது வாலிபர், அமெரிக்க இராணுவப் பணி நியமன மையத்திற்கு அனுப்பிய மின்னஞ்சலில், ஜனாதிபதி ஒபாமாவை தான் கொல்லப்போகிறேன் என மிரட்டல் விடுத்திருந்தார்.

''அமெரிக்காவின் இந்த சர்வாதிகாரி (ஒபாமா) சுட்டுக்கொல்லப்படும் வரை நான் ஓயப்போவதில்லை; ஒபாமாவின் இரத்தம் வீதிகளில் ஓடும்; இதற்காக நான் சிறையில் அடைக்கப்படுவதைப் பற்றி கவலைப்படவில்லை'' என்று அந்த மின்னஞ்சலில் அவர் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட நதான் வைன் மீது டாம்பா நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இவர் மீதான வழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது ஆஜரான சட்டத்தரணி விசாரணை அதிகாரிகளிடம் நதான் வைன் தான் ஒபாமாவுக்கு கொலை மிரட்டல் விடுத்து மின்னஞ்சல் அனுப்பியதை ஒப்புக்கொண்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

## பூகம்பத்தால் ஜப்பானின் அணு உலையில் கசிவு

டோக்கியோ, ஓக. 22

சமீபத்தில் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தின்போது ஹமோக்கா அணுசக்தி உலையில் இலேசான கதிரியக்க கசிவு ஏற்பட்டுள்ளது. ஆனால், இது பயப்படும்படி இல்லை என ஜப்பான் தெரிவித்துள்ளது.

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை கொண்ட ஜப்பானில் நிலக்கரி போன்றவை அதிகளவில் இல்லை. அதன் காரணமாக அந்நாடு மின்சார தேவையில் சுமார் 30 சதவீதத்தை அணு உலைகளின் மூலம் பெறுகிறது.

இந்நிலையில், கடந்த 11 ஆம் திகதி ஜப்பானின் சுருகா பே பகுதியில் உக்கிர பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.4 புள்ளிகளாக பதிவானது. இதில் ஒருவர் பலியானார். சுமார் 120 பேர் காயமடைந்தனர்.

அந்த பூகம்பத்தின்போது சுருகா பே பகுதிக்கு அருகிலுள்ள ஹமோக்கா அணு உலையில் இலேசான கதிரியக்கக் கசிவு ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை அங்கு மின் உற்பத்தி செய்துவரும் சிபு மின்சார நிறுவனமும் உறுதி செய்துள்ளது.

அந் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறுகையில், ''சிறிய அளவில் கசிவு ஏற்பட்டுள்ளது. அணு உலையின் ஒரு பகுதியில் அயோடின் - 133 என்ற கதிரியக்க தனிமத்தின் கசிவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் மனிதர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஒரு ஆண்டு காலத்துக்குப் பின்னர் இது மனிதர்களுக்கு இலேசான பாதிப்பை ஏற்படுத்தும் அளவில் 20 ஆயிரத்தில் 1 பங்கு என்ற அளவுதான் இருக்கும் '' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 தொகுதிகளையும் தம் வசப்படுத்தி தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி!

சென்னை, ஓக. 22

தமிழகத்தில் 5 தொகுதிகளில் நடந்த இடைத் தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அனைத்து இடங்களையும் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் வெற்றிடமாகவிருந்த கம்பம், இளையான்குடி, ஸ்ரீவைகுண்டம், பர்கூர், தொண்டா முத்தூர் ஆகிய 5 தொகுதிகளில் கடந்த 18ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெற்றது.

கம்பம், பர்கூர் மற்றும் இளையான்குடியில் தி.மு.க. வேட்பாளர்களும் தொண்டா முத்தூர், ஸ்ரீவைகுண்டம் தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்களும் வெற்றிபெற்றுள்ளனர்.

முக்கிய எதிர்க்கட்சியான அ.தி.மு.க., அதன் கூட்டணி கட்சிகளான பா.ம.க., ம.தி.மு.க. ஆகியவை இந்தத் தேர்தலைப் புறக்கணித்த போதிலும் அனைத்துத் தொகுதிகளிலும் விறுவிறுப்பான வாக்குப் பதிவு நடைபெற்றது.

வாக்குகளை எண்ணும் பணி நேற்றுக் காலை 8 மணிக்கு பலத்த பாதுகாப்புடன் தொடங்கியது.

5 தொகுதிகளிலும் தொடக்கம் முதலே தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்கள் முன்னணியில் இருந்தனர். ஒவ்வொரு சுற்றின் முடிவிலும் வாக்கு வித்தியாசம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

5 தொகுதிகளில் கட்சிகள் பெற்ற வாக்குகளின் விவரம் வருமாறு -

**ஸ்ரீவைகுண்டம்: காங்கிரஸ் வெற்றி**

காங்கிரஸ் - 53,827
தே.மு.தி.க.-22,468
சி.பி.ஐ. -3,407
பா.ஜ.க. - 1,797
வெற்றி வித்தியாசம்- 31,359 வாக்குகள்.

**இளையான்குடி: தி.மு.க. வெற்றி**

தி.மு.க. - 61,084
தே.மு.தி.க.-19,628
பா.ஜ.க. -1,487
வெற்றி வித்தியாசம் - 41,456 வாக்குகள்.

**பர்கூர்: தி.மு.க. வெற்றி**

தி.மு.க. - 89,481
தே.மு.தி.க. - 30,318
வெற்றி வித்தியாசம் - 59,163 வாக்குகள்.

**தொண்டாமுத்தூர்: காங்கிரஸ் வெற்றி**

காங்கிரஸ்- 1,12,350
தே.மு.தி.க. - 40,863
பா.ஜ.க. - 9,045
வெற்றி வித்தியாசம் - 71,487 வாக்குகள்.

**கம்பம்: தி.மு.க. வெற்றி**

தி.மு.க. - 81,515
தே.மு.தி.க. -24,142
பா.ஜ.க. - 946
சி.பி.எம். -2,303
வெற்றி வித்தியாசம் - 57,373 வாக்குகள்.

# ஜஸ்வந்தின் நூலுக்குத் தடை: குஜராத் அரசு விலக்க வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்து

புதுடில்லி, ஓக. 22

பா.ஜ.க. முன்னாள் தலைவர் ஜஸ்வந்த் சிங், முகமது அலி ஜின்னா குறித்து எழுதிய புத்தகத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை குஜராத் அரசு திரும்பப் பெறவேண்டும் - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கையாகும். ஆர்.எஸ்.எஸ். கொள்கைக்கு மாற்றுக் கருத்து தெரிவித்தால் அதை பா.ஜ.கவினர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது இந்தத் தடை மூலம் நிரூபணம் ஆகிறது.

ஜஸ்வந்த் சிங்கின் கருத்தை நாங்கள் ஏற்கவில்லை. ஆனால் ஜனநாயக நாட்டில் தங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு என்று கட்சித்தலைமையகத்தால் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜின்னா குறித்து ஜஸ்வந்த் சிங் எழுதிய புத்தகத்துக்கு சிம்லாவில் தட்டுப்பாடு ஏற்பட்டது. பா.ஜ.கவின் முக்கிய தலைவர்கள் கூட்டம் சிம்லாவில் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் சிலர் போட்டி போட்டுக் கொண்டு புத்தகங்களை வாங்கிவிட்டனர். சிலர் கடைகடையாக ஏறி ஜஸ்வந்த் சிங் கின் புத்தகம் இருக்கிறதா என்று விசாரிக்கத் தொடங்கினர். இன்னும் சிலர் புத்தகத்துக்கு முன் பதிவு செய்துவிட்டு சென்றுள்ளனர் என புத்தக விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

# பன்றிக்காய்ச்சல் பீதியால் குடும்பமே ஒதுக்கி வைப்பு

## திருச்சி அருகே பரிதாபம்

திருச்சி, ஓக. 22

திருச்சி அருகே பன்றிக்காய்ச்சல் அறிகுறி இருந்த ஒரு சிறுமிக்கு பரிசோதனை முடிவில் நோய் இல்லை என்பது தெரிந்தது.

ஆனாலும், அவர்கள் வசிக்கும் கிராமத்தை சேர்ந்த மக்கள், சிறுமியின் குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைத்துள்ளனர்.

திருச்சி ராம்ஜிநகர் அடுத்த புங்கனூரை சேர்ந்தவர் தியாகு (வயது - 32). இவரது மகள் தாரிகாவுக்கு (வயது - 2) தொடர்ந்து இருமல், காய்ச்சல் இருந்ததால், கடந்த 10ஆம் திகதி தனியார் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அந்த குழந்தையின் ரத்தம், சளி மாதிரிளை பரிசோதனைக்காக சென்னைக்கு அனுப்பினர். பரிசோதனை முடிவில், குழந்தைக்கு பன்றிக்காய்ச்சல் இல்லை என்று உறுதியானது.

இதற்கிடையே, தாரிகாவுக்கு பன்றிக் காய்ச்சல் என்று புங்கனூர் முழுவதும் பீதி பரவியது. இதையடுத்து, அவரது குடும்பத்தாரை அப்பகுதியினர் ஒதுக்கி வைத்துள்ளனர்.

இதுபற்றி தியாகுவின் உறவினர்கள் கூறுகையில், கடந்த 10 நாள்களாக தியாகுவின் குடும்பத்தாரிடம் யாரும் பேசுவதில்லை. அவரது மளிகைக் கடைக்கும் வருவதில்லை. தாரிகாவுக்கு பன்றிக்காய்ச்சல் இல்லை என்று கூறினாலும் பயப்படுகின்றனர். உண்மை நிலையை கிராம மக்களுக்கு உணர்த்த வேண்டும் - என்றனர்.

# பா.ஜ.கவின் தேர்தல் தோல்விக்கு அத்வானி, மோடியே காரணம்...!

## ஆய்வுக்குழு அதிரடி அறிக்கை

சிம்லா, ஆக. 22

பிரதமர் மன்மோகன் சிங்கை பலவீனமான பிரதமர் என்று அத்வானி அடிக்கடி தாக்கிப் பேசியமையாலும், மோடியை வருங்கால பிரதமர் என்று பிரசாரம் செய்தமையாலும்தான் பா.ஜ.வுக்கு தேர்தலில் தோல்வி ஏற்பட்டது - என்று பா.ஜ.கவின் ஆய்வுக் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பா.ஜ.வின் சிந்தனையாளர் கூட்டம் நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாக சிம்லாவில் நடந்தது. இந்த நிலையில், மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு ஏற்பட்ட தோல்வி பற்றி ஆய்வு செய்வதற்காக பால்



ஆப்தே தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையும் நேற்றுமுன்தினம் வெளியானது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு -

மன்மோகன் சிங்கை அத்வானி அடிக்கடி தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியதையும், பலவீனமான பிரதமர் என்று திரும்பத் திரும்ப விமர்சித்ததையும் மக்கள் ஏற்கவில்லை. மேலும், பிரசாரத்தின் நடுவே நரேந்திர மோடியை வருங்காலப் பிரதமர் என்று சிலர் கூறியமையாலும், வருண் காந்தியின் சர்ச்சைக்குரிய பேச்சாலும் பாதிப்பு ஏற்பட்டது.

இதுதவிர மும்பை தீவிரவாதத் தாக்குதலை திசை திருப்ப காந்தகார் விமானக் கடத்தலை காங்கிரஸ் கையில் எடுத்தது. இந்த விடயத்தில் காங்கிரஸை ஓரம் கட்ட பா.ஜ.க. தவறிவிட்டது - என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த சிந்தனையாளர் கூட்டத்தில் இந்த அறிக்கை பற்றியும் விவாதம் நடந்தது எனத் தெரிகிறது. இது குறித்து க்ட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங் கூறுகையில்-



பால் ஆப்தேயின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதா, இல்லையா என்பது பற்றி நாளை தான் தெரிய வரும் என்றார். அருண் ஜெட்லி கூறுகையில், பால் ஆப்தே அறிக்கை தர வில்லை. அதைக் கட்சி ஏற்கனவே நிராக ரித்து விட்டது என்றார். தேர்தல் தோல்வியை ஈடுகட்ட இந்துத் துவா கொள்கையை எந்த அளவில் நடைமுறைப் படுத்தலாம் என்பது பற்றி இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இந்தக் கொள்கையை தீவிரப்படுத்தாத தால்தான் வாக்கு வங்கியை இழக்க நேரிட்டது என்று சில தீவிர இந்துத்துவா ஆதரவாளர்கள் கூறியதை பா.ஜ.கவினர் ஏற்கவில்லை. தேர்தலில் பலமான கூட்டணி அமைக்க பா.ஜ.க. தவறிவிட்டது. இந்துத்துவாவில் தீவிரமாக இருப்பதால்தான் அந்த கட்சிகள் பா.ஜ.வுடன் கூட்டு சேர தயங்கின என்று அவர்கள் கூறினர்.



ஜம்மு-காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நேற்று பணி நிரந்தரம் கோரி போராட்டம் நடத்திய மின்சார வளர்ச்சி துறை தினக்கூலி தொழிலாளர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது.

# சீனாவின் செயற்பாடுகளை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது

## பாதுகாப்புத் துறை அமைச்சர் தெரிவிப்பு

புதுடில்லி, ஓக. 22

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் செயற்பாடுகளை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது - என்று பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் பல்லம் ராஜு தெரிவித்தார்.

சீனாவின் செயற்பாடுகளையடுத்து அதை எதிர்கொள்ள நாமும் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்று அவர் கூறினார்.

டில்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

சீனா இந்தப் பிராந்தியத்தின் வல்லரசாக உருவாகி வருவது உண்மைதான். அதன் பிரதிபலிப்பாக அந்நாட்டின் நடவடிக்கைகளும் உள்ளன. சீனாவின் நடவடிக்கைகள், நமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று நாம் உணரும் நிலையில் உரிய நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும்.

பாதுகாப்பு அடிப்படையில் இந்தியப் பெருங்கடலில் சீனா சில நடவடிக்கைகள் எடுப்பது அவசியம்தான். எனவே சந்தேகத்தின் பலனை வழங்கி சீனாவின் செயலைப் பகையாகக் கருத வேண்டியதில்லை - என்றார்.

செயற்கைக்கோள் எதிரமைப்புத் திறனை சீனா பெற்றிருப்பது குறித்துக் கேட்டபோது, விண்வெளி இராணுவ மயமாக்கப்படுவதை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இனி வரும் காலம் விண்வெளியை இராணுவ செயல்களுக்கு பயன்படுத்துவது தவிர்க்க முடியாதது. இதைக் கருத்தில் கொண்டு இந்தியாவும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளும் - என்றார்.

# பணம் எனக்கு முக்கியமல்ல

## ரஹ்மான் பேட்டி

சென்னை, ஓக. 22

பணத்துக்காக எந்தப் படத்தையும் ஒப்புக்கொள்வதில்லை என ஏ.ஆர். ரஹ்மான் கூறினார்.



மேலும் அவர் கூறியவை வருமாறு -

இப்போதைக்கு புதுப்பட வாய்ப்புகளை ஏற்பதை நிறுத்தி வைத்திருக்கிறேன். காரணம், ஹொலி வுட், பொலிவுட், தமிழ், தெலுங்கு என கைவசம் நிறையப் படங்கள் உள்ளன. அந்தப் படங்களை முடிக்கவே இரு ஆண்டுகள் ஆகிவிடும். பணம் எப்போதுமே எனக்கு முக்கியமல்ல.

பணம் எனது கனவும் கிடையாது. ஆனால் எனது கனவுகளை நிறைவேற்ற அது பயன்பட்டுள்ளது. இந்தப் படத்துக்கு என்னால் உழைக்க முடியும் என தோன்றும் படங்களையே ஏற்கிறேன். நான் ஒஸ்கார் விருது வாங்க வேண்டும் என்பதுதான் எனது மனைவியின் கனவாக இருந்தது.

அது நிறைவேறியதும் பல நகரங்களுக்கு சுற்றுவதே எனது வேலையாகி விட்டது. எனது குழந்தைகள் வளர்கிறார்கள். அவர்களுடன் அதிக நேரம் செலவழிக்க விரும்புகிறேன் - என்றார்.

# அப்பளம் தயாரிக்கிறார் நடிகை ஷில்பா ஷெட்டி

பிரபல ஹிந்தி நடிகை ஷில்பா ஷெட்டி, நடிப்பு தொழிலுடன் அப்பள வியாபாரத்திலும் இறங்கவிருக்கிறார். இந்த அப்பளத்துக்கு 'ஷில்பாஅப்பளம்' என்று பெயரும் சூட்டிவிட்டார்.

இந்தப் பெயரை அவர் தேர்ந்து எடுத்தது ஏன் தெரியுமா? லண்டனைச் சேர்ந்த டி.வி. நிறுவனம் 'பிக் பிரதர்' என்ற நிகழ்ச்சியை நடத்தியதும் அதில் கலந்து கொண்ட பிரபல ஆங்கில நட்சத்திரம் ஜேட் கூடி, நடிகை ஷில்பாவை இனவெறி கண்ணோட்டத்தில் திட்டினார் என சர்ச்சை எழுந்து பெரும்பரபரப்பை ஏற்படுத்தியதும் எல்லோரும் அறிந்த செய்தி. இந்த டி.வி. நிகழ்ச்சியின் போது ஷில்பாவை ஜேட் கூடி 'ஷில்பா அப்பளம்' என்று கேலி செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

டி.வி. நிகழ்ச்சி ஒளிபரப்பான பிறகு சர்ச்சைகள் அடங்கி ஜேடியும் ஷில்பாவும் தோழிகளாகி விட்டார்கள். இந்த நிலையில்தான் ஜேட் கூடி புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சமீபத்தில் மரணம் அடைந்து விட்டார்.

தோழியின் நினைவாக இப்போது தனது [illegible] 'ஷில்பா அப்பளம்' என்ற [illegible]வு செய்துள்ளார் ஷில்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளங்களில் இரவில் ராடர் வெளிச்சக் கருவிகள் பொருத்தப்படுவது அத்தியாவசியம்

## வடகடல் பிரதேசத்தில் மீன்பிடிக்கான நிபந்தனைகள்

யாழ்ப்பாணம், ஓக.22

வடகடல் பிரதேசத்தில் சகல மீன்பிடிக் கலங்களும் இரவில் வெளிச்சத்துடன் தரித்து நிற்க வேண்டும் என்றும், மரவள்ளங்களில் ராடர் வெளிச்சக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும்-

இரவு நேரங்களில் மீன்பிடிக்கச் செல்வதற்கோ அல்லது திரும்பி வருவதற்கோ அனுமதிக்கப்படவில்லை என்றும்- வடபிராந்திய கடற்படைத் தளபதி அறிவித்துள்ளார்.

வடகடல் பிரதேசத்தில் மீன்பிடிக்கான அனுமதி குறித்து யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல்கள் உள்ளடங்கியுள்ளன.

வடகடல் பிரதேசத்தில் பகலிலும் இரவிலும் மீன் பிடிப்பதற்கு வடபிராந்திய கடற்படைத்தளபதி விதித்துள்ள நடைமுறைகள் குறித்து அரச அதிபர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

* கடலுக்குச் செல்லும் இடமும், திரும்பி வரும் இடமும் ஏற்கனவே கடற்படை அல்லது இராணுவத்தினாரால் தீர்மானிக்கப்பட்ட இடங்களாக உள்ளன. அந்த இடங்களில் இருந்து மாத்திரமே வெளியில் செல்லவோ, உள்வரவோ இயலும்.

* மீன்பிடிக்கச் செல்வோர் மாலை 6 மணிக்கு முன்னதாக சென்று காலை 6 மணிக்குப் பின்பு புறப்பட்டுச் சென்ற அதே இடத்திற்கு வர வேண்டும்.

* பகலில் மாத்திரம் மீன்பிடிக்கச் செல்வோர் காலை 6 மணிக்குப் புறப்பட்டுச் சென்று மாலை 7 மணிக்கு முன்னதாக வந்து சேர வேண்டும்.

* இரவு நேரங்களில் மீன்பிடிக்கச் செல்வதற்கோ அல்லது திரும்பிவருவதற்கோ அனுமதிக்கப்படவில்லை.

* சகல மீன்பிடிக்கலங்களும் இரவில் வெளிச்சத்துடன் தரித்து நிற்க வேண்டும் வழமையான மரக்கலங்களில் ராடர் வெளிச்சக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். இதற்குரிய ஏற்பாடுகளை மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சு செய்து கொடுக்க வேண்டும். இதற்கான மாதிரி ஏற்கனவே யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

* 15 வரையான குதிரைவலுவுள்ள இயந்திரங்களை மாத்திரம் பாவிக்கலாம்.

* உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசம் தவிர்க்கப்பட்டுள்ளது தற்பொழுது விமான ஓடுபாதை, விமான இறங்குபாதை உள்ள அணுகும் பிரதேசங்கள் (Air Corridor) உயர் பாதுகாப்பு வலயமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்குரிய எல்லைகள் அப்பிரதேசத்தில் உள்ள இராணுவ அதிகாரிகள் அல்லது கடற்கடை அதிவாரிகளிடம் பெற்றுக்கொள்ளலாம். இந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. (அ)

# விதிமுறைகளை மீறி பொதுக்கூட்டம்; பழ. நெடுமாறன் மீது வழக்குப் பதிவு

சென்னை, ஓக. 22

தமிழக அரசின் உத்தரவுகளை மீறி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நேற்றுமுன்தினம் சென்னையில் பொதுக்கூட்டம் நடத்தியமைக்காக இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.



தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் அமைந்தகரை புல்லா ரெட்டி அவென்யூவில் நேற்று முன்தினம் 20ஆம் திகதி வியாழக்கிழமை பொதுக் கூட்டம் நடந்தது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 200இற்கும் மேற்பட்ட தீப்பந்தங்கள் ஏந்தி உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் விதி முறைகளை மீறி பொதுக்கூட்டம் நடத்தினார் என பொலிஸார் நெடுமாறன் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பொதுக்கூட்டத்தில் அரசின் உத்தரவுகளை மீறி அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கும் மேலாக கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட இயக்கத்தலைவர் பிரபாகரனின் படம் பொதுக்கூட்டம் மேடையில் வைக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற காரணங்களுக்காக 4 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. (சி)

# நோன்புப் பெருநாள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஓக. 22

2009ஆம் ஆண்டிற்கான ரம்ழான் நோன்புப் பிறை நேற்றுப் பல இடங்களில் தென்பட்டன என அறிவிக்கப்பட்டது.

கொழும்பு, பெரிய பள்ளிவாசலில் நேற்று மாலை கூடிய அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை அங்கத்தவர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவலக திணைக்கள அதிகாரிகள், பணிப்பாளர்கள், கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் ஏனைய பள்ளிவாசல்களின் பரிபாலன சபை உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்துகொண்ட மாநாட்டில் நாட்டின் பல பகுதிகளிலும் ரம்ழான் மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டதை ஆதாரபூர்வமாக அறிவித்தனர்.

பிறை தென்பட்டதையடுத்து இன்று முதல் சகல முஸ்லிம்களும் நோன்பு இருப்பதற்கான அறிவிப்பு விடப்பட்டது.

இதன் பிரகாரம் இன்றுமுதல் சகல முஸ்லிம் மக்களும் புனித ரம்ழான் மாதத்திற்கான நோன்பை ஆரம்பித்துள்ளனர்.

# தென்மாகாண சபைத் தேர்தலுக்கு நேற்று முதல் வேட்பு மனுத்தாக்கல்

கொழும்பு, ஓக. 22

தென் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்று முதல் 28ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

தென் மாகாண சபைத் தேர்தலில் 53 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். காலி மாவட்டத்திலிருந்து 23 பேரும், மாத்தறை மாவட்டத்திலிருந்து 18 பேரும், அம்பாந்தோட்டையிலிருந்து 12 பேருமாகத் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

2008ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் பிரகாரமே இம்முறை தென் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது

# மலையக யுவதிகளின் மரணம்; மீள் மரண விசாரணை நடக்கும்?

கொழும்பு, ஓக. 22

இரு மலையக யுவதிகள் மர்மமான முறையில் கொழும்பில் மரணித்தமை தொடர்பான விடயம் குறித்து, அந்த யுவதிகளின் சடலங்களை மீளத் தோண்டியெடுத்து, புதிய மரண விசாரணை நடத்துமாறு உத்தரவிடுவதா என்பது குறித்து கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்று முடிவு செய்யும்.

இவ்விவகாரம் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் நீதிவான் நிஷந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் எடுக்கப்பட்ட போதே, மேற்படி மீள் மரண விசாரணைக்கு உத்தரவிடக் கோரும் விண்ணப்பம் அந்த யுவதிகளின் உறவினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்டது.

மேற்படி யுவதிகளின் மரணம் தற்கொலையாக இருக்கலாம் என நேற்று நீதிமன்றில் ஆஜரான பொலிஸார் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அதனை அந்த யுவதிகளின் உறவினர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இ.தம்பையா ஆட்சேபித்தார்.

அவர், நடைபெற்று முடிந்த விசாரணைகள் குறித்து சந்தேகம் கிளப்பினார். எனவே, மேற்படி யுவதிகளின் சடலங்களை மீளத் தோண்டியெடுத்து புதிய விசாரணைகள் நீதியாக நடத்தப்படவேண்டும் என யுவதியின் உறவினர்கள் கோருகின்றனர் என்று குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக யுவதியின் நெருங்கிய உறவினர்களின் கருத்துகள் அடங்கிய சத்தியக் கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு பணித்த நீதிவான் மேலதிக விசாரணையை ஓகஸ்ட் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த யுவதிகள் மரணம் தொடர்பில் சந்தேகம் நீடிப்பதால் இவ்விடயத்தில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனப் பொலிஸ் மா அதிபரையும், சட்ட மா அதிபரையும் எழுத்துமூலம் நீதி, சட்ட மறுசீரமைப்புப் பிரதி அமைச்சர் வீ.புத்திரசிகாமணி கோரியுள்ளார்.

அவரது பணிப்பின் பேரில் அந்த அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்றும் நேற்று நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தது.

கொழும்பில் இரு வீடுகளில் பணிபுரிந்து வந்த இந்த இரு யுவதிகளும் கடந்த 14 ஆம் திகதி கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள கழிவுநீர் ஓடை அருகே சடலங்களாக மீட்கப்பட்டனர் என்பது தெரிந்ததே.

# ஜனாதிபதி நேற்று அங்குலானை விஜயம்

இரத்மலானை அங்குலானைப் பகுதியில் சமீபத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பின்னர் சடலமாக மீட்கப்பட்ட இளைஞர்களின் குடும்பத்தவர்களை ஜனாதிபதி நேற்றுச் சந்தித்தார்.

பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ரமரட்ணவுடன் அப்பகுதிக்குச் சென்ற ஜனாதிபதி சுமார் 5 லட்சம் ரூபா நஷ்டஈட்டையும் குடும்பத்தவர்களிடம் கையளித்தார்.

அங்குலானைச் சம்பவம் காரணமாக கடும் அதிருப்தியும், சர்ச்சையும் உருவாகியுள்ள நிலையிலேயே ஜனாதிபதியின் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# மைக்கல் ஜக்ஸனின் டாக்டர் முர்ரே விரைவில் கைதாவரர்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஓக. 22

மைக்கல் ஜக்ஸன் மரணம் குறித்த சர்ச்சையில் சிக்கியுள்ள அவரது டாக்டர் கொன்ராட் முர்ரே இது தொடர்பான கொலை வழக்கில் விரைவில் கைதாகவிருக்கிறார் என செய்தி வெளியாகியுள்ளது.

மைக்கல் ஜக்ஸனுக்கு டாக்டர் முர்ரே கொடுத்த அளவுக்கு அதிகமான 'டோஸ்' கொண்ட வலி நிவாரண மருந்தே அவரது மரணத்திற்குக் காரணமாக அமைந்தது என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன.

இம் மரணம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து பொலிஸார், டாக்டர் முர்ரேயின் வீடு, அலுவலகம் ஆகியவை உட்பட அவருக்குச் சொந்தமான இடங்களில் சோதனை நடத்தினர்.

இந்நிலையில், மைக்கல் ஜக்ஸன் திடீர் மரணத்தை கொலை வழக்காகப் பதிவு செய்து விசாரித்துவரும் பொலிஸார், டாக்டர் முர்ரே மீது கொலைக் குற்றச்சாட்டு பதிவு செய்து விரைவிலேயே அவரை கைது செய்ய முடிவு செய்துள்ளனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என லண்டனைச் சேர்ந்த 'பாரக்ஸ் நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அவரை கைது செய்வதற்கு முன்னர், மேலும் ஆதாரங்களை திரட்டுவதற்காக, லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள முர்ரேயின் மருந்தக அலுவலகத்தில் மீள சோதனை நடத்தவும் பொலிஸார் திட்டமிட்டுள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அமெரிக்காவுடன் பேச வடகொரியா தயார்; ஐ.நாவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதர்

வாஷிங்டன், ஓக. 22

அமெரிக்காவுடன் பேச வடகொரியா தயாராக உள்ளது என ஐ.நாவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதர் பில் ரிச்சர்ட்சன் அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்றுக்கு தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

''அமெரிக்காவுடன் தூதரக ரீதியான பேச்சு நடத்த வடகொரியா தயாராக இருப்பதற்கான அறிகுறிகள் எழுந்துள்ளன. இதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் நிலவி வரும் இறுக்கம் தளர்வதற்கான வாய்ப்பு உள்ளது'' என்றும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் வடகொரியாவுக்கு தூதரக அலுவலகம் ஏதும் கிடையாது. எனினும், நியூயோர்க்கில் அமைந்திருக்கும் ஐ.நா. அலுவலகத்தில் வடகொரியாவுக்குத் தூதரகம் உள்ளது. அதில் ஐ.நாவுக்கான தூதரக அதிகாரிகளும் பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் தம்மை நேரில் சந்தித்துப் பேசிய பின்னரே பில் ரிச்சர்ட்சன் மேற்கண்டவாறு பேட்டியளித்துள்ளார். (சி)

# அமெ. ஏவுகணைத் தாக்குதல்: பாகிஸ்தானில் ஒன்பது பேர் பலி

இஸ்லாமாபாத், ஓக. 22

வடமேற்கு பாகிஸ்தானில் ஆளில்லா அமெரிக்க விமானம் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் ஒன்பது பேர் பலியாயினர். பலர் காயமடைந்தனர். வடவசிரிஸ்தானிலுள்ள டண்டி டார்பா ஹெல் என்னும் கிராமத்திலுள்ள கட்டடமொன்றை இலக்கு வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஆப்கான் தலிபான் தலைவர் ஜலாலுதீன் ஹக்கெனியின் ஆதரவாளர்கள் இந்தக் கிராமத்தில் உள்ளார்கள் என நம்பப்படுகிறது. ஹக்கெனி ஏற்கனவே ஒரு தாக்குதலில் பலியாகிவிட்டார். அவரின் பெயரிலும் தீவிரவாத அமைப்பொன்று பாகிஸ்தானில் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள்.

இப்பிராந்தியத்தில் பழங்குடியினரே செறிந்து வாழ்கின்றனர். ஏவுகணைகள் கட்டட முற்றத்தைத் தாக்கின. இப் பிராந்தியத்திலுள்ள முக்கிய நகரான மிரான் ஷா குடியிருப்பாளர்களும் தாக்குதலின் தாக்கத்தை உணர்ந்துள்ளார்கள் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

இந்த ஏவுகணைத் தாக்குதலில் அயலிலுள்ள வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கிச் சிதறியுள்ளன. கதவுகள் பிடுங்கி எறியப்பட்டுள்ளன. அப்பகுதியல் கரும்புகை மண்டலம் எழுந்துள்ளது என்றும் அவர்கள் மேலும் கூறினார்கள். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால் நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் தலைவிரிப்பு

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 22

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் காரணமாகவே நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் உயர்வடைந்துள் ளன - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

31 வருட நிறைவேற்று அதிகார ஆட்சி முறைமையின் காரணமாக நாட்டின் பொரு ளாதார சமூக விழுமியங்களில் பாதிப்பு ஏற்பட் டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் நடவடிக்கைகள் அரசி யல் மயப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இடம்பெற்று வரும் பல்வேறு ஊழல் மோசடிகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை இல்லா தொழிக்க வேண்டுமென அவர் தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்றத்தின் தீர்மானங்களுக்கு இலங்கையில் மதிப்பளிக்கப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றம் ஓர் இறப்பர் முத்திரையைப் போன்றதொரு கருவியாகவே செயற்பட்டு வருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்த அனைத்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதிகள் மாத்திரமல்லாது கட்சிகளின் தலைவர்களும் பாதாள உலகக் குழுக் களுடன் தொடர்புகளை வைத்திருந்தனர் எனவும் அதனை எவரும் மறுக்க முடியாது எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அவ்வாறிருந்த போதிலும் தற்போ தைய அரசைப் போன்று பாதாள உலக குழுக்களுடன் சம்பந்தப்பட்ட அரசு, எப்போதும் இருக்கவில்லை எனவும் மங்கள கூறியுள்ளார்.

அரசைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கிலேயே ரகசியங்களை அறிந்தவர் களை கொலை செய்வதற்கான அனுமதி பொலிஸாருக்குக் கிடைக்கிறது எனவும் மங்கள குறிப்பிட்டுள்ளார்.

குற்றவாளிகளுக்கு சட்டத்தின் மூலமே தண்டனை வழங்கப்பட வேண்டும். குற்ற வாளிகளுக்கு மரண தண்டனை வழங்கு வதை தான் எதிர்க்கிறார் எனவும், பண்டார நாயக்க பிரதமராக இருந்த போது, தமது தந்தை மரண தண்டனை அமுல்படுத்தப் படுவதை எதிர்த்தார் - எனவும் மங்கள சமரவீர கூறியுள்ளார். (சி)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளில் உள்ள பல சொத்துகள் விடுதலைப் புலிகளுக்குச் சொந்த மானவை என்பது நிரூபிக்கப்பட்டதும் சம்பந்தப்பட்ட நாடுகள் அந்தச் சொத்துக் களையும் எஞ்சியிருக்கும் விடுதலைப் புலிகளையும் இலங்கையிடம் கையளிக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரா டுவது குறித்து மேற்குலகம் உண்மையி லேயே உறுதியாக இருக்கின்றதென்றால் விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு அது புகலி டம் அளிக்கக்கூடாது என்றும் அவர் வேண் டுகோள் விடுத்துள்ளார். (சி)

## மகஜரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன. இந்தப் போராட்டம் குறித்த கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை நீதி அமைச்சர் மிலிந்த மொரகொடவிடம் அரசியல் கைதிகள் கையளிக்கவுள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

## வவுனியா நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வவுனியாவில் மேற்கொள் ளப்பட்டு வரும், பொது மக்கள் மற்றும் வாகனங்களை சோதனையிடும் நடவடிக் கைகளை மட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அத்துடன் வவுனியாவில் வீதியில் வாகனங்கள் நிறுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. (சி)

## 13 ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்ப டுத்தப்படும் எனவும், அதற்கு அப்பா லான தீர்வுத் திட்டங்கள் தொடர்பில் ஆராயப் படும் எனவும் ஜனாதிபதி மஹிந்த, முன் னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிர ணாப் முகர்ஜியிடம் உறுதியளித்திருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி இந்திய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இலங் கைக்கு விஜயம் செய்திருந்த போது ஜனாதிபதி இத னைக் குறிப்பிட் டார் - என்றார்.

# ரஜினியின் படத்துக்குப் புலிகளின் பணமா? கொதித்தெழுந்து மறுக்கிறது திரையுலகம்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தின் படங் களுக்கு விடுதலைப் புலிகள் பணம் கொடுத் தனர் என இலங்கை அமைச்சர் கூறுவது சுத்த அபத்தமானது. அப்படிப்பட்ட நிலையில் ரஜினி காந்த்தும் இல்லை, தமிழ் சினிமாவும் இல்லை என்று தமிழ்த் திரையுலக முக்கியஸ்தர்கள் ஒரே குரலில் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் அப்துல் ரிஷாத் பதியுதீன் அளித்த ஒரு பேட்டியில், ரஜினிகாந்த் நடித்த படங்களுக்கு லண்டனைச் சேர்ந்த இலங் கைத் தமிழர் ஒருவர் மூலம் புலிகள் நிதியு தவி செய்தனர். அந்த லண்டன் தமிழர் தமிழ் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார். அவர் புலிகள் கொடுக்கும் பணத்தை வைத்துத் தான் படத் தயாரிப்பில் ஈடுபட்டு வந்தார் என்று கூறியிருந்தார்.

ஆனால் இதை திரையுலகம் திட்டவட்ட மாக மறுத்துள்ளது. பதியுதீனின் பேச்சை தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ராம.நாராய ணன் கண்டித்துள்ளார். இயக்குநர் அமீர் கூறு கையில், புலிகளின் பெயரைக் கெடுக்க வேண் டும் என்ற நோக்கத்தில் இலங்கை அமைச்சர் இவ் வாறு பேசியுள்ளார். எந்தவித ஆதாரமும் இல்லாமல் பேசியுள்ளார் - என்றார்.

இதற்கிடையே, இலங்கை அமைச் சரின் பேச்சுக்கு பதிலோ, விளக்கமோ அளிப்பதில்லை என்று ரஜினி முடிவெடுத்துள்ளார். இதை அவ ரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

## பயங்கரவாதத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வம்காட்டி வருகின்றன. பாகிஸ்தான் இரா ணுவத்தினர் ஏற்கனவே இலங்கை இராணு வத்தினரிடம் பயங்கர வாத ஒழிப்பு நடவடிக் கைகள் சம்பந்தப் பட்ட பயிற்சிகளை பெற் றுள்ளனர் - என்றார். (சி)

## அகதிகளை மீளக் குடியேற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசர நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுப்பது அவசியம்.

இதற்காக இரண்டு விடயங்களை இலங்கை அரசு முக்கியமாக மேற்கொள்ளவேண்டும்.

முதலாவது முகாமில் உள்ள மக்களை மிகக்கூடிய விரைவில் விடுவிப்பது. மற்றை யது அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது.

பல உலக நாடுகளும், இலங்கைக்கு உதவி வழங்கும் தரப்புகளும் அங்கு காணப்படும் நிலைமை குறித்துத் தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளன.

இலங்கை சர்வதேச சமூகத்தின் கௌர வமான அங்கத்துவ நாடாக - ஜனநாயக, பல்லின நாடாக - இருப்பதை விரும்பு கின்றது என நான் கருதுகிறேன்.

### வலியுறுத்தும் விடயங்களை நிறைவேற்ற வேண்டும்

மேலும் அதன் சொந்த நலன்களும் உள் ளன. இவற்றை உறுதி செய்வதற்கு நாங் களும் ஏனையவர்களும் வலியுறுத்தும் விட யங்களை இலங்கை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கைக்கு அமெரிக்கா பெருமளவு மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது.

என்றாலும் நான் முன்னர் குறிப்பிட்ட இரு விடயங்களை நிறைவேற்று வதற்கு என்ன நடவடிக்கை எடுக் கப்படுகின்றது என் பதை பொறுத்தே பலவிடயங்கள் அமையும்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம் களில் குறிப்பிட்டளவு விடுதலைப் புலி உறுப்பினர்கள் உள்ளனர். சீருடைகளைக் களைந்துவிட்டு, ஆயுதங்களை எறிந்து விட்டு அவர்கள் மக்களுடன் கலந்துவிட்டனர்.

அவர்களை தனிமைப்படுத்துவதும் அவர் களுடைய புனர்வாழ்விற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதும் முக்கியமானவை.

மீள் குடியேற்றம் மற்றும் அரசியல் நல்லிணக்கம் போன்ற விடயங்களில் இலங்கை காணும் அதிகளவு முன்னேற் றம், புனர்நிர்மாணத்திற்கு அவசியமான நிதியை அதிகளவு நாங்கள் வழங்குவ தற்கு வழிகோலும் என இலங்கை அதிகாரி களிடம் தெரிவித்துள்ளோம்.

இப்படி நாம் குறிப்பிடுவது அச்சுறுத் தலல்ல. நாங்கள் அச்சுறுத்தல் விடுப்ப தில்லை.

இலங்கை அரசு எமது நட்பு நாடு என்றாலும் அரச சார்பற்ற அமைப்புகள், அமெரிக்க காங்கிரஸ் மற்றும் எமது நிர் வாகத்தை சேர்ந்தவர்கள் இலங்கை நிலை வரம் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள் ளனர் என்பதையும் நாம் மறந்துவிடமுடியாது.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)


யாழ் மண்ணிலும் ஒலிக்கிறது...
* உள்வரும் அழைப்புகள் இலவசம்
* 1500/- றீலோட் இலவசம்
லங்கா பெல்
முகவர்: அஸ்வினி மல்டி பிளாசா
அழையுங்கள்: 021 567 7777

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
விடுமுறை விசேட வகுப்புகளுடன்:-
A/L 2011
இணைந்த கணிதம் Sat, Sun 5 P.m. G.கஜேந்திரன் (B.Sc.)
பௌதிகவியல் "MECHANICS" Mon, Thurs 5.30 P.m.
CHE:- M.A.நிரோஜன் (B.Sc.)
அரசியல் S.ஸ்ரீதரன் (B.A.)
Gr.1 முதல் O/L வரை

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம், யாழ்.மாவட்ட அலகு யாழ்ப்பாணம்
N.C.A.S.L - Unit Office, Jaffna
நிர்மாண ஒப்பந்த நிறுவனங்களை பதிவுசெய்தல்
இக்ராட் (ICTAD) பதிவு சான்றிதழ்பெற்ற நிர்மாண ஒப்பந்த நிறு வனங்கள் ஒருங்கிணைந்து செயற்பட்டு நலன்பெறும் வகையில் சங் கத்தில் பதிவு செய்யுமாறு அறியத்தருகின்றோம்.
(ICTAD) இக்ராட் பதிவு சான்றிதழ் பிரதியோடும் சங்க அலுவல கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
முகவரி:- NCASL-unit office,
No. 175, PointPedro Rd,
Annaipanthy Junction, Jaffna.
T.P.No: 060 221 0148
தலைவர்.

கற்சுமி வெளியீடு
தரம் 1, 2, 3, 4, 5 மாணவர்களுக்குரிய ஜூலை, ஓகஸ்ட் மாத இதழ்கள்
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
வெளிவந்துவிட்டன.
"உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்"
கற்சுமி, 166, நாவலர் வீதி, யாழ்.

விற்பனையாகிறது
அரச, தனியார் வங்கிகளுக்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி
இலவசம்
விலை ரூபா 370/- மத்திய வங்கிக் குறிப்பேடு இலவசம்
ஆங்கிலம், தமிழ் மொழி மூலமான கடந்த கால வினாவிடைகளுடன், மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது.
தொகுப்பு
சகாரியா பப்ளிக்கேசன்
கொழும்பு
வங்கிப்பயிலுநர்கள், வர்த்தகர்களுக்கு விசேட விலைக்கழிவு மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 6693, 222 4374

இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய நற்செய்தி!
ASP ENTERPRISES
முதன் முறையாக அறிமுகப்படுத்தும்
INDUCTION COOKER
அனுகூலங்கள்
# குறைந்த நேரம்
# சிக்கன மின்சாரம்
# தீ,மின் அபாயமில்லை
# இலகுவாகக் கையாளலாம்
# ஒரு வருட உத்தரவாதம்
# இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
# சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது (ISO 9001 : 2000)
யாழ் மண்ணில் புதியதோர் உதயம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்
கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0602001585, 0776079352

ESOFT இன் மாபெரும் கிரிக்கெட் விருந்து...
யாழ் மண்ணில் ESOFT Computer Studies
இன் ஆரம்ப விழாவை முன்னிட்டு நடாத்தப்படும்
T/20
JOLY STAR Vs K.C.C.C
திகதி: 23.08.2009
நேரம்: 1.00pm
இடம்: யாழ் இந்துக் கல்லூரி மைதானம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org